Annual Subscription
Rs.100/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

தனிப்பிரதி
ரூ.10/-

மலர் - 27 இதழ் - 5 மே 2014

## பதினேழாம் வேனிற்கால வேதாகம முகாம்
## மே 5 - 7, 2014 - ஏலகிரிமலை



வேதாகம முகாமில் கலந்து கொண்ட வாலிபர்கள்



வேதாக முகாமில் கலந்து கொண்ட இளம் பெண்கள்



வேதாகம முகாமில் கலந்து கொண்ட பெண்கள்

Women in the camp



முகாமில் மாலை கூட்டத்தின் போது

Evening meeting

**ஆசானின் அறிவுரையிலே....**


1. ஆசிரியர் உரை....................1
2. ஏன் நாங்கள் இரட்சிக்கப்பட .... 8
3. பெண்கள் பகுதி....................12
4. வாலிபர் பகுதி....................14
5. இடறுதற்கான கல்....................18
6. கதவு ....................23
7. தீர்க்கதரிசிகள்....................26
8. நீங்கள் உங்களுடையவர்கள்....................29


**வேதாகம முகாம் பற்றி**

பங்கு பெற்ற

| | |
|---|---|
| மாநிலங்கள் | 3 |
| **எண்ணிக்கை** | **474** |
| சபைகள் | 44 |
| நகரங்கள், மாநகரங்கள் | 35 |

திருமுழுக்கு பெற்றவர்கள் **11**

பங்குபெற்ற, ஜெபித்த அனைவருக்கும் நன்றி

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam

Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

**Pleading for the restoration of pure New Testament Christianity**

**Vol. 27 MAY - 2014 Issue - 5**


ஆசிரியர் உரை

# பவுலின் மீதிப் பயணத்திலிருந்து...

அப்போஸ்தலன் பவுல் மேற்கொண்ட, வேதாகமச் சிறப்பு மிக்க ரோமப் பயணத்திலிருந்து நமக்குத் தேவையான சில பாடங்களைக் கற்றுக் கொள்ள விரும்பி, பவுலோடு சேர்ந்து நாமும் பயணத்தை கடந்த மாதம் தொடங்கினோம். ஆனால், பிரயாண தூரம் அதிகமாயிருந்து பயணம் நீண்டுவிட்டபடியாலும், பயண அனுபவங்கள் நமது இதழின் அதிகமான பக்கங்களை ஆக்கிரமித்துக் கொண்டபடியாலும், தொலை தூரப் பயணம் படிப்போருக்குக் களைப்பை ஏற்படுத்தக் கூடுமென்று நாம் அஞ்சியதாலும், அத்தோடு நமது பயணத்தில் ஒரு அபாய கட்டம் எதிர்பட்டபடியாலும், பயணத்தைப் பாதியிலேயே நிறுத்தி, அது வரைக்குமான பயணத்திலிருந்து சில பாடங்களைக் கற்றுக் கொண்டோம்.

ஆனால், திட்டமிட்டபடி பவுலை ரோமாபுரி மட்டும் கொண்டு போய்ச் சேர்க்க நாம் விரும்புவதாலும், பயணத்தைப் பாதியிலே நிறுத்தி மீண்டும் தொடங்குவது நமக்குப் பழக்கப்பட்ட ஒன்றாக இருப்பதாலும், எஞ்சியுள்ள பயணத்திலிருந்து என்ன பாடங்கள் கிடைக்குமென்று நீங்கள் ஆவலோடு எதிர்பார்ப்பதாலும், மீதிப் பயணத்தையும் நாம் தொடர்ந்து மேற்கொண்டு தேவன் நமக்கு வெளிப் படுத்த இருக்கும் எஞ்சிய பாடங்களையும் கற்றுக் கொள்ள முயற்சிப்போம்.

அதற்கு முன்பாக, மீதிப் பயணத்தின் பின்னணியைக் கொஞ்சம் பார்த்துவிடுவோம்.

நமது கப்பல் யூரோக்கிலிதோன் என்னும் கடுங்காற்றுக்குள் சிக்கி சீரழிந்து கொண்டிருக்கும்போது, பவுல் அவர்கள் நடுவே நின்று, கடந்த இரவிலே கர்த்தர் தனக்கு வெளிப்படுத்தினபடி அவர்களை திடப்படுத்தி, " எனக்குச் சொல்லப்பட்ட பிரகாரமாகவே நடக்கும் என்று தேவனிடத்தில் நம்பிக்கையாயிருக்கிறேன்" என்று சொன்னான் என்பதோடு கடந்த மாதம் நமது பயணத்தை நிறுத்தினோம் (அப். 27:25).

ஆனால், மகிமையான தேவனின் வல்லமையான வார்த்தைகளைக் கேட்டுப் பழக்கமில்லாத, விசுவாசித்தறியாத கப்பலாட்கள், தங்களின் அனுபவக் கணக்குப்படியும், குறைமதியின் கணிப்புப் படியும் இனித் தப்பிப் பிழைக்கவாய்ப்பில்லை என்பதைத் திட்டவட்டமாகத் தெரிந்துகொண்டு, கப்பலைப் பாதுகாக்க நங்கூரம் பாய்ச்ச பிரயாசப்படுகிறவர்கள் போல பாசாங்கு செய்து, கடலில் குதித்து, நீந்தி தப்பிக்க எத்தனிக்கையில், பவுல் நூற்றுக்கதிபதியையும், சேவகரையும் நோக்கி, இவர்கள் கப்பலில் இராவிட்டால் நீங்கள் தப்பிப் பிழைக்க மாட்டீர்கள் என்று எச்சரித்தான் *(அப். 27:31)*. அதன்படி அவர்கள் தப்பிப் போகாதபடி சில தடுப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டது. பவுல் ஏற்கனவே சொன்னது போலவும் அவன் தேவனிடத்தில் வைத்த நம்பிக்கையின் படியும், கப்பலிலிருந்த 276 பேரின் உயிருக்கும் எந்த சேதமும் வராமல், அதேசமயம் ஆச்சுப் போச்சு என்று கரை சேர்ந்து, அந்தத் தீவு மெலித்தா என்று கண்டார்கள் *(அப். 28:1)*.

பிறகு அந்தத் தீவார் இவர்களை அன்போடு ஏற்றுக் கொண்டு இவர்களுக்கு முதலுதவி செய்யும்படியாய் நெருப்பை மூட்டி அனலூட்டினர். அப்பொழுது குளிர்காய பவுல் சில விறகுகளைப் பொறுக்கி, அதிக சூடுண்டாக்கும்படி நெருப்பின் மீது போடுகையில், ஒரு விரியன் பாம்பு அனலுறைத்துப் புறப்பட்டு அவனுடைய கையைக் கவ்விக் கொண்டது. *(அப். 28:4)* " விஷப்பூச்சி அவன் கையிலே தொங்குகிறதை அந்நியராகிய அந்தத் தீவார் கண்டபோது, இந்த மனுஷன் கொலைபாதகன், இதற்குச் சந்தேகமில்லை. இவன் சமுத்திரத்துக்குத் தப்பி வந்தும், பழியானது இவனைப் பிழைக்க வொட்டவில்லையென்று தங்களுக்குள்ளே சொல்லிக் கொண்டார்கள். அவன் அந்தப் பூச்சியைத் தீயிலே உதறிப்போட்டு ஒரு தீங்கும் அடையாதிருந்தான். அவனுக்கு வீக்கங்கண்டு அல்லது சடிதியாய் விழுந்து சாவானென்னறு அவர்கள் பார்த்துக் கொண்டிருந்தார்கள். நெடுநேரமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தும், ஒரு சேதமும் அவனுக்கு வராததைக் கண்டபோது, வேறு சிந்தையாகி, இவன் தேவனென்று சொல்லிக் கொண்டார்கள் " *(28:4,6)*. மனிதனின் இந்தப் பாழும் மனம் எவ்வளவு சலனப் புத்தியுள்ளதென்று பாருங்கள்.

பிறகு, அந்த தீவில் சில காலம் தங்கியிருந்து, தீவின் முதலாளி உட்பட அனைவரின் அன்பையும், மரியாதையையும் பெற்று, சீரகூசா, புத்தேயோலி பட்டணங்கள் வழியாக ரோமபுரி சென்றடைந்தார்கள். *(அப். 28:14)*. அங்கே பவுல் வருகிறார் என்ற செய்தி கிடைத்தவுடன்,

சகோதரர்கள் இரண்டு குழுவாகச் சென்று சிலர் அப்பியுபுரம் வரைக்கும், சிலர் மூன்று சத்திரம் வரைக்கும் சென்று வரவேற்றார்கள். இந்த இரண்டு இடங்களும் ரோமாபுரியிலிருந்து முறையே சுமார் 43,33 மைல்கள் தூரத்திலிருந்தது. "...... அவர்களைப் பவுல் கண்டு, தேவனை ஸ்தோத்தரித்துத் தைரியமடைந்தான்" *(28:15)*. சகோதர அன்பு எவ்வளவு நன்மையைத் தருகிறது பாருங்கள்!

சரி, பவுல் ரோமாபுரி வந்து சேர்ந்து, தன் காரியங்களை ஒழுங்கு படுத்துவதற்கு ஒரு மூன்று நாளை மாத்திரம் எடுத்துக் கொண்ட பிறகு, யூதரில் பிரதானமானவர்களை வரவழைத்து, .....இஸ்ரவேலுடைய நம்பிக்கைக்காகவே இந்தச் சங்கிலியால் கட்டப் பட்டிருக்கிறேன் என்று தெளிவுபடுத்தினான். *(28:17,20)*. மேலும், சில காரியங்களை அவனிடத்தில் திட்டமாய்த் தெரிந்து கொள்ள விரும்பி, ".... ஒரு நாளைக் குறித்து, அநேகம் பேர் அவன் தங்கியிருந்த வீட்டிற்கு அவனிடத்தில் வந்தார்கள். அவன் காலமே தொடங்கி சாயங்கல மட்டும் மோசேயின் நியாயப்பிரமாணத்திலும், தீர்க்கதரிசிகளின் ஆகமங்களிலும் இருந்து இயேசுவுக்கடுத்த விசேஷங்களை அவர் களுக்குப் போதித்து, தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கித்து, கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவைப் பற்றிய விசேஷங்களை உபதேசித்துக் கொண்டிருந்தான்" *(28:30,31)* என்று கூறுகின்றது.

இதற்குப் பிறகு, இந்த அப்போஸ்தலனுக்கு என்ன நேர்ந்தது என்று நமக்குச் சொல்லப்படவில்லை. இதுகுறித்து வேதாகமம் மௌனம் சாதிக்கிறபடியால், மாந்த அறிவின்படியான கருத்துக்கள் பல உண்டு. ஆனால், அது நமக்கு அவசியமில்லையென்பதாலும், நமது திட்டப்படி, பவுலை ரோமாபுரி கொண்டு போய்ச் சேர்த்துவிட்ட படியாலும், இங்கே தானே நாம் நிறுத்திக் கொண்டு, மீதிப் பயணத்தி லிருந்து சில பாடங்களை கற்றுக் கொள்வோம்.

## I. கப்பலில் இருந்தால் தான் காக்கப்படுவீர்கள்

ரோமாபுரிக்கான மீதிப் பயணம் தரும் முதல் பாடம், கப்பலிலுள் ளவர்கள் காப்பாற்றப்பட வேண்டுமானால், கப்பலிலேயே இருக்க வேண்டுமென்பது.

பதினான்கு நாட்களாக கப்பல் அலைக்கழிக்கப்பட்டு, ஒரு வகையாக கரைசேரும் கட்டத்தை நெருங்கினது. *(அப். 27:27)* ஆனால், ஆக்கப் பொறுத்தவன் ஆறப் பொறுக்கவில்லையென்பது போல கப்பலாட்கள் பொறுமையிழந்து, தப்பிப் பிழைப்போம் என்ற நம்பிக்கையும் இழந்து, கப்பலை விட்டோடிப்போக முயற்சித்தனர். *(அப். 17:30)* அப்பொழுது தான் பவுலடியார், நூற்றுக்கதிபதியையும், சேவகரையும் நோக்கி : *" இவர்கள் கப்பலில் இராவிட்டால் நீங்கள் தப்பிப் பிழைக்கமாட்டீர்கள் என்றான் " (அப். 27:31)*.

இங்கே நாம் ஒன்றைக் கவனிப்பது அவசியம். கப்பலிலிருந்த வர்களின் இரட்சிப்புக்கு, அதாவது அவர்கள் காக்கப்படுவதற்கு

நிபந்தனை கொடுக்கப்பட்டிருந்தது. அந்த நிபந்தனை மீறப்படுமானால் அவர்கள் இரட்சிக்கப்படுவதில்லை. ஆகவே தான் பவுல், கப்பலில் இராவிட்டால் நீங்கள் தப்பிப் பிழைக்கமாட்டீர்கள் என்று எச்சரிக்க வேண்டியதாயிருந்தது.

இந்த எச்சரிப்பு நமக்குத் தரும் ஒரு முக்கிய பாடம் என்னவெனில், இரட்சிக்கப்படும் எல்லோரும் பரலோகம் சென்றுவிட முடியாதென்பது. பரலோகம் செல்வதற்கு முதலாவது ஒருவன் வேத வசனங்களின்படியாக விசுவாசித்து (மாற்கு 16:16) மனந்திரும்பி (அப். 2:38) அறிக்கையிட்டு (ரோமர் 10:10) ஞானஸ்நானம் பெற்று (அப். 22:16) இரட்சிப்புக்குள் வரவேண்டும். அப்பொழுது இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் அனுதினமும் தமது சபையில் சேர்த்துக் கொள்கிறார் (அப். 2:47). அப்படி சபைக்குள் வருகிறவர்கள், இறுதி வரை அந்த ஒரே சபைக்குள்ளாக நிலைத்திருந்தால் தான் பரலோகம் செல்ல முடியும். இரட்சிப்பு என்பது எப்பொழுதும் நிபந்தனையுடன் கூடியதே. இதை நாம் மறவாமல் மனதில் கொள்வது அவசியம்.

ஆனால், இந்த உண்மைக்கு மாறாக, கிறிஸ்து கட்டின ஒரே சபைக்குள் வராமலேயே இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ள முடியுமென்றும், பெற்றுக்கொண்ட இரட்சிப்பில் நிலைத்திராமலேயே பரலோக பாக்கியம் கிடைக்குமென்றும், நம்புகின்றனர். போதிக்கவும் செய்கின்றனர். நிச்சயமாக அப்படியில்லை. இக்கருத்துக்கு வலு சேர்க்கும் பல உதாரணங்கள் வேதாகமத்தில் உண்டு. நோவாவும் அவன் குடும்பமும் தேவன் சொன்னபடியெல்லாம் செய்து, **பேழைக்குள் இருந்தபடியால்** தான் இரட்சிக்கப்பட்டார்கள் (ஆதி. 6) பேழைக்கு வெளியே இருந்திருந்தால் அவர்களும் அழிக்கப்பட்டி ருப்பார்கள். எகிப்திலிருந்த இஸ்ரவேலர், தேவன் கட்டளையிட்டபடி யெல்லாம் செய்து நிலைக்கால்களில் இரத்தம் தெளிக்கப்பட்ட **வீட்டிற்குள் இருந்தபடியால்** தான், சங்காரத் தூதனிடமிருந்து தப்பிக்க முடிந்தது. (யாத். 12:21,22) வீட்டிற்கு வெளியே இருந்தவர்கள் அழிவின் நாளில் காக்கப்படவில்லை. ஆகையால், அருமையானவர்களே! இறுதி நாளில் நாம் காக்கப்படுவதற்கு இரட்சிப்பு என்ற கப்பலை, கிறிஸ்துவின் ஒரே சபை என்ற கப்பலை விட்டு வெளியே வராமல், அவைகளுக்குள் நிலைத்திருப்போம்.

## II. மனிதன் மாறும் இயல்பு கொண்டவன்

மீதிப்பயணம் தருகின்ற இரண்டாவது பாடம், மனிதன் தன் வழிகளில் நிலையற்றவனாக இருக்கிறான் என்பது. ஆகவே தான் வேதாகமம் நாசியிலே சுவாசம் உள்ள மனிதனை நம்ப வேண்டாம் என்று சொல்கிறது.

கப்பல் யாத்திரை செய்தவர்கள், மெலித்தா தீவுக்கு வந்தபோது, அந்தத் தீவார் அவர்கள் மீது அன்பு பாராட்டி அவர்களின் குளிருக்காகவும், நனைந்திருந்த அவர்கள் உடைகள் உலரும்படியாகவும் நெருப்பை மூட்டினர். அச்சமயத்தில், கொடிய விஷமுள்ள ஒரு

விரியன் பாம்பு, பவுலுடைய கையை கவ்விக் கொண்டது. விரியனின் வீரியத்தை நம் ஊரார் அறிந்து, " விதி வந்தால் தான் விரியன் தீண்டும் " என்று சொல்வது போல், அத்தீவாரும் பவுலுக்கு முடிவு வந்து விட்டது என்று உண்மையாகவே நம்பினர். அதுமாத்திரமல்ல, அவர்களால், விசாரணையின்றி, " கொலை பாதகன் " என்று ஏகமனதாக தீர்ப்பளிக் கப்பட்டான் (28:4). ஆனால், அதே மனிதர்கள் அவனுக்கு ஒன்றும் நேராத போது வேறு சிந்தையாகி " இவன் தேவன் " என்று சொன்னார்கள். சிலமணி நேரத்துக்கு முன்பாக கொலைபாதகனாக இருந்தவன் அதற்குள்ளாக தேவனாக மாறிவிட்டான். அட, மனிதா! மனிதா!!.

மனிதனின் இந்த மாறும் இயல்புக்கு எடுத்துக்காட்டுகள் பல வேதத்தில் உண்டு. உதாரணத்திற்கு, கலாத்திய பட்டணத்து மக்களை கவனித்துப் பாருங்கள். பவுலாலே நற்செய்தி அறிவிக்கப்பட்டபோது, அதை மிகுந்த தாகத்தோடும், மனவிருப்பத்தோடும் ஏற்றுக்கொண்டு தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று மகிழ்ச்சியோடு கூறி, கிறிஸ்தவத்தில் திளைந்திருந்தனர். ஆனால், யூதர்கள் அவர்களிடம் வந்து, அய்யய்யோ, மோசேயின் பிரமாணத்தை விட்டுப் போய் விட்டீர்கள் என்றபோது, மீண்டும் தலை கீழாகத் திரும்பிவிட்டனர் (கலா. 1:6-12).

கர்த்தரைப் பின்பற்றுகிற மக்களும் கூட இந்தவிதமாகவே இருக்கிறார்கள் என்பது வேதனையான ஒன்று. எதற்காக ஒன்றை நம்புகிறோம் அல்லது எதற்காக ஒன்றை ஏற்றுக் கொள்கிறோம் என்பது தெரியாமலும், புரியாமலும் செய்துவிட்டு, காரியங்கள் தாங்கள் எதிர்பார்க்கிறபடியும், தாங்கள் விரும்புகிறபடியும் போகாதபொழுது, உடனே, அந்தர் பல்டி அடித்து விடுவது. இயேசுவின் நாட்களிலும், இந்த மனிதன் அப்படித்தான் இருந்தான். திரள், திரளாகப் பின் சென்றனர். ஆனால், நமதாண்டவர் தன்னைப் பின்பற்றுகிறவர்கள், அறிந்து கொள்ள வேண்டியதைப் போதித்த போது, இது கடினமான உபதேசம் , யார் இதைக் கேட்பார்கள் (யோவான் 6:60) என்று சொல்லி பின் வாங்கினர்.

ஒருவேளை மனிதன் மாறும் இயல்புடையவனாக இருக்கலாம். ஆனால், கிறிஸ்தவன் ஒருபோதும் அப்படி இருக்கக் கூடாது. அப்படி யிருந்த கிறிஸ்தவர்கள் தேவனால், வேதாகமத்தால் கடிந்து கொள்ளப் பட்டிருக்கிறார்கள். (1 தீமோ. 1:20). முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்கள், கடுமையான கொடுமைகளுக்கு மத்தியிலும் தேவனுக்கு உண்மை யாக இருந்தனர். வேத வசனங்களின் முழு ஆதாரங்களினடிப்படை யில் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்கள் அவர்களைப் போல் இருக்க வேண்டும். அப்போஸ்தலன் பவுல் கொரிந்தியர்களுக்கு எழுதும் போது, அப்படி இருக்க வேண்டுமென்று தான் எழுதுகிறார். " ஆகையால், எனக்குப் பிரியமான சகோதரரே, கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து, நீங்கள் உறுதிப்பட்டவர் களாயும் அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகிறவர்களாயும் இருப்பீர்களாக" (1 கொரி. 15:58).

அன்பானவர்களே, நாம் எப்படிப்பட்டவர்களாக உள்ளோம்? நம்முடைய பக்தி விஷயத்தில் தேவனுக்கடுத்த காரியத்தில் எப்படியுள்ளோம்? மாறும் இயல்பு கொண்ட மெலித்தா தீவாரைப்போல் உள்ளோமா அல்லது எந்நிலையிலும் உறுதியுடனிருந்த முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்கள் போல் உள்ளோமா? இக்காரியத்தில் நாம் மனிதர்களாக அல்ல, கிறிஸ்தவர்களாக இருப்போமாக...

## III பவுல், ராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கித்தான்

மீதிப் பயணம் தரும் மூன்றாவது பாடம் தேவனுடைய ராஜ்யம் பற்றியது. ஆம், சபையாகிய, தேவனுடைய இராஜ்யத்திற்கு, அந்த அப்போஸ்தலன் கொடுத்த அதிமுக்கியத்துவம் பற்றியது.

ரோமாபுரிக்குச் சென்றவுடன், யூதரில் பிரபலமானவர்களையெல்லாம் அழைத்து " *..... காலமே தொடங்கிச் சாயங்கால மட்டும், தேவனுடைய இராஜ்யத்தைக் குறித்துச் சாட்சி கொடுத்து விஸ்தரித்துப் பேசினான்* " என்றும், தான் வீட்டுச் சிறையில் இரண்டு வருடம் வைக்கப்பட்டிருந்த போது, தன்னிடத்தில் வந்த யாவருக்கும், மிகுந்த தைரியத்துடனே, " ***தேவனுடைய இராஜ்யத்தைக் குறித்து பிரசங்கித்தான் என்றும் உள்ளது*** " *(28:23,31)*. அதாவது, ரோமாபுரியில், பவுல் செய்த ஊழியமே இராஜ்ய ஊழியம்தான். இராஜ்யத்தைக் குறித்துப் பேசுவதுதான் பிரதானமானதென்றும், அவசியமென்றும், அது அவசரமென்றும் எண்ணிச் செயல்பட்டான்.

நாமாக இருந்தால் ரோமபுரி சென்றவுடன் என்ன செய்திருப்போம்? நம்முடைய பயண அனுபவங்கள், மற்றும் பயணத்தில் நேர்ந்த அவலங்கள் பற்றி பல நாட்கள் வரை சொல்லி, கிறிஸ்துவுக்காக நாம் செய்யும் வேலைகளுக்கு அங்கீகாரம் தேட முயற்சித்திருப்போம் அல்லது கிறிஸ்துவினிமித்தம் நான் செய்யும் தியாகங்களைப் பாருங்கள் என்று பீற்றி தம்பட்டம் அடித்திருப்போம் அல்லது இன்று அநேகர் செய்வதுபோல், கடல் யாத்திரையில், என்னுடைய உடமைகள் எல்லாம் போய்விட்டது என்று ஒப்பாரி வைத்து, இது தான் சரியான சமயம் என்று எண்ணி வசூல் வேட்டையில் இறங்கி யிருப்போம்.

ஆனால், இந்தப் பிரதான அப்போஸ்தலனோ, இவையொன்றைப் பற்றியும் கவலைப்படாமல், தனக்குக் கிடைத்த நாட்களையும், நேரத்தையும், தனது முழுச் சிந்தையையும் ஒரே ஒரு காரியத்தில் மாத்திரம் ஈடுபடுத்தியுள்ளான். அந்த ஒரு காரியம் தேவனுடைய இராஜ்ஜியம் பற்றியது. அப்படியானால் இந்த தேவனுடைய ராஜ்யம் என்பது என்ன? ஏன் இதற்கு இவ்வளவு முக்கியத்துவம்?.

தேவனுடைய இராஜ்யம் என்பதும் கிறிஸ்துவின் இராஜ்யம் என்பதும் ஒன்றுதான் (எபே. 5:5). கிறிஸ்து இந்தப் பூமியில் ஊழியம்

செய்த நாட்களில் தனது இராஜ்யத்தை, அதாவது, இராஜ்யமாகிய சபைக் கட்டுவேன் என்று வாக்களித்தார் (மத். 16:16,18). அந்த இராஜ்ஜியம் எருசலேமில் ஸ்தாபிக்கப்படுமாகையால், அங்கு காத்திருங்கள் என்று தனது சீடர்களுக்குக் கட்டளையிட்டார் (அப். 1:5). அதுபோலவே, தேவனுடைய இராஜ்யமாகிய சபை, பெலத்தோடே எருசலேமில் ஸ்தாபிக்கப்பட்டது (அப். 2ம் அதி). இந்த இராஜ்ஜியத்துக் குள்ளாகத்தான் இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் சேர்த்துக் கொண்டு வந்தார் (அப். 2:47) வருகிறார். ஆக, இராஜ்யமும் சபையும் ஒன்றுதான்.

இந்த ராஜ்யமாகிய சபைக்காகத்தான் இயேசுக்கிறிஸ்து மீண்டும் வரப்போகிறார். " ..... தேவனும், பிதாவுமாயிருக்கிறவருக்கு ராஜ்யத்தை ஒப்புக்கொடுப்பார் என்று வசனம் சொல்கிறது. (1 கொரி. 15:24; எபே. 5:27).

அருமையானவர்களே, இந்த இராஜ்யமாகிய சபையின் முக்கியத்துவத்தை பவுல் அறிந்தபடியால்தான், அதற்காகவே தன்னை அர்ப்பணித்தார். ஆனால், இன்று நிலைமை என்ன? சபையைப் பற்றி பேசுவதே, கிறிஸ்தவ உலகில் பாவமாகக் கருதப்படுகிறது. சபையைப் பற்றி பேசுவது பாவமானால், அப்போஸ்தலன் பவுல் எருசலேமில் இரண்டு வருடம் தங்கி, தான் சந்தித்த எல்லோரிடத்திலும் பாவம் செய்துள்ளான் என்று தான் பொருள். அவன் பாவம் செய்யும்படி யாகவே, தேவனால் பிரத்யேகமாகத் தெரிந்து கொள்ளப்பட்டுள்ளான். அப்படித்தானே? சொல்லுங்கள்.

தேவ மனிதனாகிய பவுலுக்கு இராஜ்யமாகிய சபையைப் பற்றிப் பேசுவதும், அந்த ஒரு சபைக்குள்ளாக ஜனங்களை வழி நடத்துவதும் முக்கியமானால், ஒவ்வொரு தேவனுடைய பிள்ளைக்கும் அது முக்கியமானதாகவே இருக்க வேண்டும். நாம் செய்யும் ஒவ்வொரு பிரசங்கத்திலும், இராஜ்யம் அல்லது சபை பற்றிய செய்தி இருக்க வேண்டும். சபையைப் பற்றி பிரசங்கிப்பது தவறெனில், பவுல் செய்த பிரசங்கங்களனைத்தும் தவறுதான். ஆனால், தேவ ஆவியினால் நிரப்பப்பட்ட பவுல் பிரசங்கிக்கத் தெரியாதவரல்ல என்பது நம் யாவருக்கும் நன்றாகத் தெரிந்ததே.

ஆகவே, பிரசங்கிக்கும் ஒவ்வொருவரும் இராஜ்யம் பற்றியே பிரசங்கிப்போம். கேட்கும் ஒவ்வொருவரும், இராஜ்யம் அல்லது சபை பற்றிய செய்திகளையே விரும்பிக் கேட்போம்!

அன்பானவர்களே, நாம் திட்டமிட்டபடி, ரோமப் பயணத்தை முடித்து அதிலிருந்து சில பாடங்களைக் கற்றுக்கொள்ள தேவன் உதவி செய்துள்ளார். இந்தப் பயண பாடங்களின்படி நடக்க சர்வ வல்ல தேவன் துணை புரிவாராக! ஆமென்!.



# ஏன் நாங்கள் இரட்சிக்கப்பட வேண்டும்?

**Bro. J.C. சோட்**

நாம் ஏன் தேவனை, கிறிஸ்துவை, பரிசுத்த ஆவியானவரை, வேதாகமத்தை விசுவாசிக்கிறோம் என்று இதுகாறும் பார்த்தோம். இதற்கு முந்தின பாடத்தில், நாம் ஏன் மோசேயின் பிரமாணத்தின் கீழ் அல்லது பழைய ஏற்பாட்டின் கீழ் இல்லை என்பது பற்றிப் பேசினோம். நியாயப்பிரமாணத்தின் கீழ் இரட்சிப்பு சாத்தியமாயிருந்தால், கிறிஸ்து வருவதற்கு அவசியமே இருந்திருக்காது. கிறிஸ்து இந்த உலகத்துக்கு வந்ததே நியாயப் பிரமாணத்தினால் மனிதனை இரட்சிக்க முடியாது என்பதற்கு நிரூபணமாயிருக்கிறது. நியாயப்பிரமாணம் அப்போது ஒரு மனிதனை இரட்சிக்க முடியவில்லையானால் இப்போதும் இரட்சிக்க முடியாது.

நாம் இரட்சிக்கப்படுவது ஏன் அவசியம் என்று நாம் பார்த்துக் கொண்டிருப்பது, இது மனிதன் இழந்த போன நிலையில் இருக்கிறான் என்பதைக் காட்டுகிறது. இது உண்மைதான். அப்போஸ்தலனாகிய பவுல் ரோமருக்கு எழுதும்போது, " எல்லோ ரும் பாவஞ்செய்து தேவ மகிமையற்றவர்களாகி" என்று எழுது கிறார் (ரோமர் 3:23). மறுபடியும், நாம் இப்படியாக வாசிக்கிறோம், "அந்தப்படியே! நீதிமான் ஒருவனா கிலும் இல்லை " (ரோமர் 3:10) நீதிமான் ஒருவனும் இல்லையென் பதில் சிறுபிள்ளைகளும் உள்ளடக்கமா? இல்லை. ஏனென்றால், ரோமர் 3 ஆம் அதிகாரத்தில் பாவிகள் பொய்யர்களாக, சபிக்கிறவர் களாக, கொலை செய்பவர்களாக, தேவனை எதிர்ப்பவர்களாக அடை யாளப்படுத்தப்படுகிறார்கள். நன்மை, தீமை அறியாத சிறுபிள்ளைகள் வேத வசனங்களில் சுத்தமானவர்களாகவும், ஒன்றும் அறியாதவர் களாகவும் சொல்லப்பட்டிருக்கிறார்கள். இயேசு தம்முடைய நாட்களில் வாழ்ந்த ஜனங்களைப் பார்த்து சிறுபிள்ளைகளைப் போல மாறா விட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க முடியாது என்று போதித்தார் (மத். 18:1-6). இயேசுவின் நாட்களில் இருந்த பாவிகள் சிறு குழந்தைகள் போன்ற அறியாமை நிலைக்கு அப்பாற்பட்டவர்கள். எது சரி, எது தவறு என அறியும் பருவத்தை அடைந்தவர்கள். அவர்கள் தங்கள் செயல்களுக்கு பொறுப்பாளிகள். ஆகவே தான், பாவிகள், அநீதிமான்களென்றும், தேவ மகிமையற்றவர்களென்றும், தேவ பக்தி யற்றவர்களென்றும் சொல்லப்பட்டிருக்கிறார்கள். பாவிகளைப் பற்றி மேலும் விவரிக்க யோவான் இப்படிச் சொல்கிறார். " பாவஞ் செய்கிற எவனும் நியாயப்பிரமாணத்தை மீறுகிறான்; நியாயப்பிரமாணத்தை மீறுகிறதே பாவம்" (I யோவான் 3:4) என்று. இங்கே, நாம் ஆரம்பத் திற்கு திரும்பிப்போய் மனிதன் ஏன் பாவியானான் என்று பார்ப்போம்.

தேவன் ஆணையும், பெண்ணையும் உண்டாக்கி ஏதேன் தோட்டத்தில் வைத்தபோது அவர்கள் பாவமில்லாமல் தான் இருந்தார்கள். அவர்களுடைய வேலை தோட்டத்தைச் சுத்தப்படுத்துவதும், பாதுகாப்பதும், தேவன் அவர்களைப் பார்த்து, " *நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம். ஆனாலும், நன்மை, தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்க வேண்டாம். அதைப் புசிக்கும் நாளில் நீங்கள் சாகவே சாவீர்கள்* " என்று சொன்னார். (*ஆதி. 3:1-7*). தேவன் அவர்களை பிறகு சந்தித்த போது, அவர்கள் சாக்கு போக்கு சொன்னதாகவும் வேத வசனம் கூறுகிறது. ஆதாம் ஏவாளை குற்றஞ்சாட்டினான், ஏவாள் சர்ப்பத்தை குற்றஞ்சாட்டினாள். அதன் பின்பு தேவன் அவர்களுடைய கீழ்ப்படியாமைக்கு, நிச்சயமாகவே அதற்கான விளைவுகளைச் சந்திக்க வேண்டும் என்பதை வெளிப் படுத்தினார். இந்தத் தண்டனை சாத்தான் அல்லது சர்ப்பத்துக்கும் பொருந்தும். தடைசெய்யப்பட்ட கனியைப் புசிக்கும் நாளிலே சாகவே சாவீர்கள் என்று அவர்களுக்கு சொல்லப் பட்டது, அப்படியே அவர்கள் ஆவிக்குரிய மரணத்தை சந்தித்தார்கள். அதாவது, அவர்களுக்கும், தேவனுக்கும் இடையில் பாவம் வந்தது. இதன் மூலம் அவர்களுக்கும் தேவனுக்கும் இடையே பிரிவு ஏற்பட்டது, அவர்கள் தேவனுக்கு சத்துருக்களாக மாறிவிட்டார்கள்.

தேவன் பாவமில்லாதவர், தேவன் பூரணமானவர், தேவன் பரிசுத்தமானவர் என்று வேதாகமம் நமக்குப் போதிக்கிறது. தேவன் பொய்யுரையாதவர் என்றும், அவர் ஒருவனையும் சோதிக்கிற வருமல்ல என்றும் கூறுகிறது. (*எபி. 6:18; யாக். 1:13*). தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துவும் " பாவமில்லாதவர் " என்று சொல்லப் பட்டிருக்கிறது (*I பேதுரு 2:22*). தேவன் பூரணராயிருந்த தினாலும், அவர் பாவத்தை வெறுத்ததினாலும், பாவியாகிவிட்ட மனிதன், தொடர்ந்து தன்னுடைய பாவத்தில் இருந்து கொண்டு தேவனை அணுகுவ தென்பது இயலாததாயிருந்தது. பழைய ஏற்பாட்டு தேவனுடைய தீர்க்கதரிசி இப்படியாகச் சொன்னார். "*இதோ, இரட்சிக்கக் கூடாத படிக்கு கர்த்தருடைய கை குறுகிப் போகவுமில்லை; கேட்கக் கூடாத படிக்கு அவருடைய செவி மந்தமாகவுமில்லை. உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும், உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினையை உண்டாக்குகிறது; உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவி கொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது என்று.* (*ஏசாயா 59:12*). " *கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள் மேல் நோக்கமாயிருக்கிறது, அவருடைய செவிகள் அவர்கள் வேண்டு தலுக்குக்கவனமாயிருக்கிறது; தீமை செய்கிறவர்களுக்கோ கர்த்தருடைய முகம் விரோதமாயிருக்கிறது* " (*I பேதுரு 3:12*).

பழைய ஏற்பாட்டுக் காலம் முழுவதும், தேவன், பாவமுள்ள மனிதன் தன்னுடைய பாவத்தை நிவர்த்தி செய்வதற்கு மிருகபலி செலுத்த வேண்டும் என்று கட்டளையிட்டிருந்தார். அப்படி இருந்த போதிலும் மனிதனுடைய பாவங்கள் வருடந்தோறும் நினைவு கூரப் பட்டபடியால் பலிகள் தொடர்ந்து செலுத்தப்பட வேண்டியதாயி ருந்தது. காளை வெள்ளாட்டுக்கடா இவைகளுடைய இரத்தம் பாவங் களை நிவர்த்தி செய்ய முடியவில்லை (*எபி. 10:1-4*). கடைசியாக,

தேவன் மனித இனத்தின் பாவங்களுக்காக ஒரே தரம் பலியாக தம்முடைய சொந்தக் குமாரனையே இந்த உலகத்திற்கு அனுப்பிக் கொடுத்தார் (எபி. 10:5-10). *“இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டும் இருக்கிறீர்கள்; ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப்பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின் வைத்துப் போனார். அவர் பாவஞ்செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை, அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும் போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்பு செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார். நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர் தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின் மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்”* என்று பேதுரு சொன்னார் (I பேதுரு 2:21-24). எனவே, மனிதன் இழந்து போன நிலையில் இருந்தான். அவன் பாவத்தில் இருந்தான், தேவ பக்தியற்றவனாக, அநீதிமானாகக் காணப்பட்டான். மனிதன் தன் சுயநீதியினாலோ, நற்கிரியைகளைச் செய்வதினாலோ இரட்சிக்கப்பட முடியாமல் இருந்தது. நியாயப்பிரமாணத்தினாலும் அவன் இரட்சிப்பைப் பெற முடியாமலிருந்தது. இதுபற்றி பவுல் இப்படியாகச் சொல்கிறார். *“நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார்”* (தீத்து. 3:5).

கிறிஸ்து மரித்ததினால் அவருடைய இரத்தம் சிந்தப்பட்டது. அவருடைய இரத்தத்தைக் கொண்டு நம்முடைய பாவங்கள் கழுவப்பட்டிருக்கிறது என்று நாம் வாசிக்கிறோம். பவுல் இப்படியாகச் சொன்னார். *“அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது”* (எபே. 1:7). *“கிறிஸ்து தாமே இது பாவ மன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது என்று சொன்னார்”* (மத். 26: 28). ஆனால், ஒருவருடைய பாவங்கள் இப்படியாக மன்னிக்கப்பட கிறிஸ்து, வைத்திருக்கிற நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ள வேண்டும். கிறிஸ்து நாம் அவரை தேவனுடைய குமாரன் என்று விசுவாசிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார் (யோவான் 14:1, அப். 8:37). நம்முடைய பாவங்களிலிருந்து நாம் மனந்திரும்ப வேண்டும் என்று அவர் கட்டளையிட்டிருக்கிறார் (லூக்கா. 13:3). அவரை நாம் மனிதருக்கு முன்பாக அறிக்கை செய்வது அவசியம் என்றும் சொல்லியிருக்கிறார் (மத். 10:32). கடைசியாக, அவர் ஞானஸ்நானத்தையும் கட்டளையிட்டுள்ளார். பேதுரு, தன்னிடம், இரட்சிக்கப்பட நாங்கள் என்ன செய்ய வேண்டும்? என்று கேட்ட மக்களைப் பார்த்து, *“நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள்”* என்று சொன்னார் (அப். 2:38). ஒருவர் கர்த்தருக்குக் கீழ்ப்படியும் போது

தான் அவருடைய பாவங்கள் மன்னிக்கப்படுகிறது. அப்பொழுது தான் ஒருவர் தேவனுடைய குடும்பத்தில் ஒரு பிள்ளையாக, அவருடைய சமூகத்தில் ஒரு சிநேகிதராகப் பிரவேசிப்பதை சாத்தியப்படுத்துகிறது. ஒருவர் தொடர்ந்து உண்மையுள்ளவராக இருக்கும் போது இயேசு கிறிஸ்துவின் இரத்தம் தொடர்ந்து அவருடைய பாவங்களைக் கழுவுகிறது (I யோவான் 1:7)

கிறிஸ்து மனிதனுக்காக மரித்தபோது, அவர் மனிதனுடைய மத்தியஸ்தராக, ஒப்புரவாக்குபவராக, பரிந்து பேசுகிறவராக, பிரதான ஆசாரியாராக மாறினதோடு தேவனிடத்தில் அவனைத் திரும்ப சேர்ப்பவராகவும், பிதாவுக்கு முன்பாக மனிதனுடைய பிரதிநிதியாகவும் ஆனார். (I தீமோ. 2:5; எபே. 2:16; யோவான் 2:1, எபி. 8:1; எபி. 10:21).

என் நண்பர்களே, நாம் பாவிகள், நம்முடைய ஆத்துமாவை இழந்தவர்கள். நம்மை நாம் இரட்சிக்க முடியாது. அதுபோல எந்த ஓர் மனிதனோ அல்லது மனிதனால் உண்டாக்கப்பட சட்டமோ அல்லது எந்த ஒரு அமைப்போ நம்மை இரட்சிக்கவோ முடியாது. லஞ்சம் கொடுத்து நாம் பரலோகம் செல்லவும் முடியாது. ஆகையால், நாம் கர்த்தருடைய இரக்கத்தில் இருக்கிறோம். அவரோடு நாம் பேரம் பேசும் நிலையில் கூட இல்லை. எனவே, எவ்வித நிபந்தனையுமின்றி அவரிடம் நம்மைத் தாழ்த்தி அவருடைய இரக்கத்திற்காக மன்றாட வேண்டும். ஆனால், கவனியுங்கள்; நமக்கு ஓர் நற்செய்தி இருக்கிறது. நாம் இரட்சிக்கப்படும்படிக்கும், தேவனோடு ஒப்புரவாகும்படிக்கும், ஒரு நாள் பரலோகம் சென்று தேவனோடு என்றென்றும் வாழும்படிக்கும் கிறிஸ்து நமக்காக மரித்தார். ஆனால், அதற்கு நாம் முன்பே குறிப்பிட்டபடி சில நிபந்தனைகள் இருக்கின்றன. நாம் கர்த்தரை எந்த அளவுக்கு விசுவாசிக்கிறோம் என்பதை அவர் பார்க்க விரும்புகிறார். அத்தோடு நாம் இரட்சிக்கப்பட எந்த அளவுக்கு செயல்பட விரும்புகிறோம் என்பதையும் அவர் பார்க்க விரும்புகிறார். நாம் நம் இரட்சிப்பை சம்பாதிப்பதற்கு சாத்தியமே இல்லை. கர்த்தர் நமக்கு செய்யப் போகிற எல்லாவற்றிற்காகவும் நாம் கிரயத்தை செலுத்துவதென்பது முடியாத காரியம். ஆனால், நாம் அவரில் விசுவாசம் வைத்து, அவரைப் பின்பற்றும் படி பாவங்களிலிருந்து திரும்பி, அவரை தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட்டு, இயேசுவின் இரத்தத்தோடு தொடர்பை ஏற்படுத்திக்கொள்ளவும், நம் பாவங்கள் கழுவப்படவும் ஞானஸ்நானம் பெறவேண்டும் (மாற்கு 16:16; அப். 2:38; மத். 10:32; ரோமர் 6) இவைகளைச் செய்யும் போது, கர்த்தர் நம்மை மன்னித்து, இரட்சித்து, நம்முடைய எல்லா பாவங்களிலிருந்தும் நம்மைக் கழுவி, தம்முடைய சபையிலே நம்மை சேர்த்துக் கொள்வார். அங்கே நாம் அவரை சேவித்து, மரணபரியந்தம் அவருக்கு உண்மையாயிருக்கும் போது, ஒரு நாள் நாம் பரலோகம் சென்று அங்கே அவரோடு என்றென்றுமாய் வாழ முடியும்.

**பெண்கள் பகுதி**

# "கிறிஸ்தவக் குடும்பம்"



**சகோ. ரேச்சல் நாயகம்**

**கி**றிஸ்துவுக்குள் அருமையான சகோதரிகளே! கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினால் உங்களுக்கு வாழ்த்துதல்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

கிறிஸ்தவக் குடும்பம் என்பது மிகவும் முக்கியமானது. தேவச் சித்தம் குடும்பங்கள் கிறிஸ்தவக் குடும்பங்களாக இருக்க வேண்டும் என்பதே. எனவே, அனந்த ஞானமுள்ள பிதாவாகிய தேவன் வார்த்தைகளால் இப்பூமியை சிருஷ்டித்து, வெளிச்சம் கொடுத்து, வெட்டாந்தரையை உருவாக்கி, வானத்தை உண்டாக்கி, சந்திரன், சூரியனை சிருஷ்டித்து, புல், பூண்டுகளையும், சமுத்திரம் நீர்வாழ் ஜந்துக்கள் என்று அனைத்தையும் உண்டாக்கி படைப்பு வேலையை முடித்தார். ஆனாலும், நிறைவு பெறாமல் ஏதோ ஒன்று குறையாக இருக்கிறதென்று எண்ணி மனிதனை மண்ணினால் உண்டாக்கினார். மனிதனைப் பார்த்தார் தனியாக இருப்பது நல்லதல்ல என்று கண்டு ஏற்ற துணையை உண்டாக்கினார். **முதல்** குடும்பம் ஏதேன் தோட்டத்தில் தேவனால் ஏற்படுத்தப்பட்டது (ஆதி. 2:18,25).

தேவனால் ஏற்படுத்தப்பட்ட இரண்டாவது ஸ்தாபனம் சபை. ஒரு சபையின் வெற்றி குடும்பங்களைச் சார்ந்தே அமைகிறது. எனவே, குடும்பம் பற்றி வேதம் என்ன சொல்கிறது என்று பார்ப்போம்.

திருமணம் தேவனால் ஏற்படுத்தப்பட்ட ஒன்று (ஆதி. 2: 18,25). திருமணம் கனமுள்ளது (எபி. 13:4) " விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளதாயும், விவாக மஞ்சம் அசிப்படாததாயுமிருப்பதாக, வேசிக்கள்ளரையும் விபச்சாரக்காரரையும் தேவன் நியாயந்தீர்ப்பார். இயேசு கிறிஸ்து இந்தக் காரியத்தைப் பற்றி போதித்திருக்கிறார்". (மத். 19:1,9) வசனப் பகுதிகளில் தேவன் ஒரு ஆணுக்கு ஒரு பெண் என்று வலியுறுத்துகிறார். வேசித்தனத்தினாலேயன்றி பிரிந்து, மறுதிருமணம் செய்யக்கூடாது என்றும் கூறுகிறார்.

வேதாகமம் குடும்பத்தைப் பற்றி பேசும்போது கணவன், அதாவது, தகப்பன் குடும்பத்துக்கு தலைவராக இருக்க வேண்டும். மனைவி அதாவது தாய் குடும்பத்தை கவனிக்கிறவளாக இருக்க வேண்டும். குழந்தைகள் கற்றுக் கொடுக்கப்பட வேண்டும்.

இனி தேவன் ஒவ்வொருவருக்கும் விதித்த கடமைகளை பார்ப்போம். எபேசி. 5:23ன்படி கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறதுபோல புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான். தன் சொந்த ஜனங்களையும்

விசேஷமாகத் தன் வீட்டாரையும் விசாரிக்கிறவனாய் இருக்க வேண்டும் (1 தீமோ. 5:8) புருஷர்கள் தங்கள் மனைவிகளில் அன்பு கூர வேண்டும். அவர்கள் மேல் கசந்து கொள்ளா திருங்கள் (கொலோ. 3:19). பிள்ளைகளைக் கர்த்தருக்கேற்ற சிட்சையிலும், போதனையிலும் வளர்க்க வேண்டும் (எபே. 6:4).

மனைவிகளின் பொறுப்பு என்கிற வரிசையில் (எபே. 5:22ன் படி) மனைவிகள் கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறதுபோல தங்கள் சொந்த புருஷருக்குக் கீழ்ப்படிய வேண்டும். தங்கள் புருஷரிடத்தில் அன்பு கூர வேண்டும் (தீத்து 2:4). வீட்டில் தரித்திருக்கிறவர்களாய் இருக்க வேண்டும் (தீத்து 2:5).

பிள்ளைகளின் பொறுப்பு என்று பார்க்கும் போது தங்கள் பெற்றோருக்கு கர்த்தருக்குள் கீழ்ப்படிய வேண்டும். வாழ்நாள் நீடித்திருப்பதற்கு தகப்பனையும், தாயையும் கனம் பண்ண வேண்டும் (எபே. 6:1,2,3).

கிறிஸ்துவுக்குள் அன்பான தாய்மார்களே, மேலே கொடுக்கப்பட்ட வேத வசனங்களை படித்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். கிறிஸ்தவக் குடும்பம் என்பது இந்தப் பண்புகளை கொண்டதாயிருக்க வேண்டும். பலமுறை இவ்வசனப்பகுதிகளை படித்திருந்தாலும், பிரசங்கிக்க கேட்டிருந்தாலும் இக்கட்டளைகளைக் கடைப்பிடிக்கப்படாமல் தான் இன்று குடும்பங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. நாகரீகம், கலாச்சாரம் என்ற பெயரில் இந்த வசனங்கள் காணாமல் போய்க் கொண்டிருக்கிறது. குடும்பங்கள் சீரழிந்து கொண்டு வருகிறது. சமாதானம் கொஞ்சமும் இல்லை. எல்லாம் தலைகீழாக நடந்து கொண்டுள்ளது. கணவன், மனைவியிடையே உண்மை இல்லை. அதன் விளைவாக கர்த்தரிடமிருந்து ஈவாக பெற்ற பிள்ளைகள் திசைமாறி மோசமடைந்து கொண்டு இருக்கிறார்கள். கர்த்தரிடமிருந்து பெற்ற ஒவ்வொரு நன்மைக்கும் கணக்குக் கொடுக்க வேண்டும் என்பதை மறந்து விடக்கூடாது.

வேதாகமம் சொல்லுகிற ஆலோசனைப்படி நடக்க முயலும் போது மெய்யாலுமே குடும்பம் அமைதியாக, சமாதானத்துடன் " கிறிஸ்தவக் குடும்பமாக " வாழ முடியும்.

வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் வசனம் பின்பற்றப் பட வேண்டும். அப்படிச் செய்யும் போது தேவன் மகிமைப்படுவார். பிறருக்கும் நம் குடும்பம் முன் மாதிரியாக அமையும். ஆக, அருமையானவர்களே வசனத்தின்படி வாழ்வோம். ஒவ்வொருவரும் தம்தம் பொறுப்புகளை பயபக்தியோடு செய்யும்போது அங்கே பலன் கிடைக்கிறது. தேவன் பிரியப்படுவார். அது நமக்கும், நம் பிள்ளைகளுக்கும் நன்மையாகத் தான் முடியும். இதை விசுவாசிப்போம். செயல்பட நம்மை ஒப்புக்கொடுப்போம். தேவன் உதவி செய்வார். ஆமென்.

வாலிபர் பகுதி

# கிறிஸ்துவை விட்டு எங்கே போகிறார்கள்?

**Bro. Benny Martin**

**வா**லிபக் கண்மணிகளுக்கு வானவராம் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்! உங்களை மறுபடியும் இக்கட்டுரையின் வாயிலாக சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். பிரியமானவர்களே ! நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இப்பூமியில் ஊழியம் செய்த நாட்களில் நூற்றுக்கணக்கான சீடர்கள் அவருக்கு இருந்திருக்கிறார்கள். இயேசுவின் சீடர்களில் பலர் அருவடைய உபதேசம் கடினமானது என்று சொல்லி அவருடனே கூட நடவாமல் பின் வாங்கிப் போனார்கள். அப்பொழுது இயேசு மீதமிருந்த பன்னிருவரையும் நோக்கி " நீங்களும் போய்விட மனதாயிருக்கிறீர்களோ? " என்று கேட்டார். இயேசு எத்தனை மனமுடைந்தவராய் இத்தகைய கேள்வியைக் கேட்டிருக்கக் கூடும் என்று சற்று நீங்கள் கற்பனை செய்து பாருங்கள்.

அப்போஸ்தலனாகிய பவுல், பிற்காலங்களில் சிலர் விசுவாசத்தை விட்டு விலகிப்போவார்கள் என்று எழுதினார். "ஆகிலும், ஆவியானவர் வெளிப்படையாகச் சொல்லுகிறபடி, பிற்காலங்களிலே மனச்சாட்சியில் சூடுண்ட பொய்யருடைய மாயத்தினாலே சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும், பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவிகொடுத்து விசுவாசத்தை விட்டு விலகிப் போவார்கள்" (1 தீமோ. 4:1). அப்போஸ்தலனாகிய யோவான் சிலர் பிரிந்து போய்விட்டதாக எழுதினார். அவர்கள் நம்மை விட்டுப் பிரிந்து போனார்கள், ஆகிலும் அவர்கள் நம்முடையவர்களாயிருக்கவில்லை, நம்முடையவர்களல்லவென்று வெளியாகும்படிக்கே பிரிந்து போனார்கள் (1யோவான் 2:19). இன்னும், "பின்வாங்கிப் போனவர்களைப் பற்றிய உதாரணங்கள் பெயர்களுடன் தரப்பட்டிருக்கிறது. இந்த நல்மனச் சாட்சியைச் சிலர் தள்ளிவிட்டு, விசுவாசமாகிய கப்பலைச் சேதப்படுத்தினார்கள். இமெனேயும், அலெக்சந்தரும் அப்படிப்பட்டவர்கள்; என்று நாம் வாசிக்கிறோம்" (1 தீமோத். 1:19,20).

" நீங்களும் போய்விட மனதாயிருக்கிறீர்களோ?" என்று இயேசு கேட்ட இந்தக் காட்சியை சற்று கற்பனை செய்து பாருங்கள். சீடர்கள் இயேசுவோடு பல மாதங்கள் இருந்திருந்தும், ஏன் அவரை விட்டு விலகி பின்வாங்கிப் போனார்கள்? அதே கேள்வி இன்றும் கேட்கப் படுகிறது. கிறிஸ்துவின் சீடர்கள் இன்றும் அவரை விட்டு விலகிச் சென்று கொண்டு தான் இருக்கிறார்கள். ஆனால், அவர்கள் ஏன் அப்படிச் செய்கிறார்கள்? கிறிஸ்து நமக்குச் செய்திருக்கிறவைகளை

எண்ணிப் பார்த்தால் நாம் எப்படி அவரை விட்டு விலகிச் செல்ல முடியும்? அவர் சொன்னதை பார்த்தால் நாம் எப்படி அவரை விட்டு விலகிச் செல்ல முடியும்? அவர் சொன்னதை நினைவில் கொள்ளுங்கள். “ என்னாலே அல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான் ” (யோவான் 14:6). பின்வாங்கிப் போகிறவர்களைப் பற்றி தேவன் சொல்லும் போது, “ ஒருவன் பின்வாங்கிப் போவானானால் அவன் மேல் என் ஆத்துமா பிரிமாயிராது ” என்று சொல்கிறார் (எபி. 10:38). கிறிஸ்து அவர்களுக்கு செய்தகைளையெல்லாம் உதறித் தள்ளி விட்டு, நன்றி கெட்டவர்களாய் அவரை விட்டு விலகிச் செல்கிறவர்கள் எங்கே செல்கிறார்கள் என்று பார்ப்போம்.

## I சிலர் மறுபடியும் தங்கள் பாவ வாழ்க்கைக்கே செல்கிறார்கள்

இயேசு கிறிஸ்து நம்மை பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்க வந்தார். ஆனால், சிலர் அவரை விட்டு விட்டு மறுடியும் அந்தப் பாவ வாழ்க்கைக்கே சென்று விடுகிறார்கள். சகோதரரே, "ஜீவனுள்ள தேவனை விட்டு விலகுவதற்கேதுவான அவிசுவாச முள்ள பொல்லாத இருதயம் " என்று எபிரெய ஆசிரியர் பின்வாங்கிப் போகிறவர்களை எச்சரிக்கிறார் (எபி. 3:12). கிருபையினாலே நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் என்று வேதாகமம் சொல்கிறது (எபே. 2:5). ஆனால், அதே வேதாகமம் சிலரைப் பார்த்து கிருபையினின்று விழுந்தீர்கள் என்றும் சொல்கிறது (கலா. 5:4). எனவே தான், தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக் கக்கடவன் என்று எச்சரிப்பு விடுக்கப்பட்டிருக்கிறது.

கிறிஸ்துவைப் பின்பற்றுவதற்கு நாம் ஒரு தீர்மானம் எடுக்க வேண்டும். அதென்னவென்றால், என்ன ஆனாலும் நாம் அவரையே பின்பற்றுவோம் என்கிற தீர்மானம் தான் அது. அதில் அசையாதவர் களாய் நாம் உறுதியாய் இருக்க வேண்டும். ஏனென்றால், இயேசு இப்படியாகச் சொன்னார். " என்னோடே இராதவன் எனக்கு விரோதி யாயிருக்கிறான்" என்று (மத். 12:30). மேலும், 2 கொரி. 5:14,15 வசனங் களில் சொல்லப்பட்டிருக்கிறவைகளை கவனியுங்கள். கிறிஸ்து வினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது; ஏனென்றால், எல்லாருக்காகவும் ஒருவரே மரித்திருக்க, எல்லாரும் மரித்தார்கள் என்றும், பிழைத்திருக்கிறவர்கள் இனி தங்களுக்கென்று பிழைத் திராமல், தங்களுக்காக மரித்து எழுந்தவருக்கென்று பிழைத்திருக்கும் படி, அவர் எல்லாருக்காகவும் மரித்தாரென்றும் நிதானிக்கிறோம். அப்போஸ்தலனாகிய பேதுரு கிறிஸ்துவை விட்டு விலகிப் போகிறவர் களைப் பற்றிச் சொல்லும் போது, " அவர்கள் நீதியின் மார்க்கத்தை அறிந்த பின்பு தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட பரிசுத்த கற்பனையை விட்டு விலகுவதைப் பார்க்கிலும், அதை அறியாதிருந்தார்களனால்

அவர்களுக்கு நலமாயிருக்கும். நாய் தான் கக்கினதைத் தின்னவும், கழுவப்பட்ட பன்றி சேற்றிலே புரளவும் திரும்பினது என்று சொல்லப்பட்ட மெய்யான பழமொழியின்படியே அவர்களுக்கு சம்பவித்தது " என்று சொல்கிறார். (2பேதுரு 2:21,22). பாவத்திலிருந்து கழுவப்பட்டு பின்பு கிறிஸ்துவை விட்டுப் பிரிந்து பாவ வாழ்க்கைக்கு மறுபடியும் திரும்புவது, கழுவப்பட்ட பன்றி சேற்றிலே புரளத் திரும்பினது போலாகும்.

## II சிலர் உலகத்தின் ஐசுவரியத்தை நாடிச் செல்கிறார்கள் :

ஒருமுறை நம்முடைய அருமை இரட்சகர் ஒரு கேள்வியைக் கேட்டார்; அக்கேள்வி (மத். 16:26)ல் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இதோ, அந்தக்கேள்வி மனுஷன் உலக முழுவதையும் ஆதாயப் படுத்திக்கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு என்ன லாபம்? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்? " சிலர் நித்திய ஐசுவரியத்தின் வாக்குத்தத்தங்களில் திருப்திப்படாமல் கிறிஸ்துவை விட்டுப்பிரிந்து அழிந்து போகின்ற உலகத்தின் ஐசுவரியத்தை நாடிச் சென்று விடுகிறார்கள். யூதாசைப் போல் முப்பது வெள்ளிக்காசுக்காக அவர்கள் இயேசுவைக் காட்டிக் கொடுக்கிறார்கள். பூமியிலே உங்களுக்கு பொக்கிஷங்களை சேர்த்து வையுங்கள் என்று இயேசு சொன்னார் (மத். 6:19,21). ஆனால், சிலர் இவ்வுலகத்தின் ஐசுவரியம், அதிகாரம், கௌரவம், சந்தோஷம் போன்றவைகளுக்காக நம்முடைய அருமை இரட்சகரை விட்டுப் பிரிந்து செல்கிறார்கள்.

## III சிலர் மார்க்கப் பிரிவினைக் கூட்டத்திற்குள் செல்கிறார்கள்

சாத்தானுடைய மிக வல்லமையான பிரசங்கம் என்னவென்றால் எல்லா சபைகளும் ஒன்றுதான் என்பதாகும். கிறிஸ்து ஒருபோதும் அப்படிச் சொன்னதில்லை, அப்படி அவர் ஒருபோதும் போதிக்கவு மில்லை. இயேசு, நான் என் சபையைக் கட்டுவேன் என்று சொன்னார் (மத். 16:18). அந்தச் சபையை, அவர் தமது சுய இரத்தத்தினாலே சம்பாதித்தார் (அப். 20:28). சாத்தான் மக்கள் மனதில் எப்படி வேண்டு மானாலும் இரட்சிக்கப்பட முடியும். எல்லா சபைகளும் ஒன்றுதான் என்கிற தவறான எண்ணத்தை ஏற்படுத்தி இருக்கிறான். இயேசு கட்டின இந்த சபையை இவ்வுலகத்திலுள்ள எல்லா மார்க்கப் பிரிவினை சபைகளும் சேர்ந்து எதிர்க்கின்றன.

பிரிவினையே இருக்கக்கூடாது என்று இயேசு ஜெபித்தார்; நான் இவர்களுக்காக வேண்டிக் கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக் கொள்ளுகிறேன். அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னி லேயும் நான் உம்மிலேயும் இருக்கிறது போல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக் கொள்ளுகிறேன் (யோவான் 17:20,21).

**IV சிலர் கிறிஸ்துவை விட்டுப்பிரிந்து நம்பிக்கையற்றுச் செல்கிறார்கள்.**

இயேசு கிறிஸ்து மகிமையின் நம்பிக்கையாக நமக்குள் இருக்கிறார். (கொலோ. 1:27) எனவே, கிறிஸ்துவை விட்டுப் பிரிந்து செல்பவர்கள் நம்பிக்கையற்றுப் போகிறார்கள். (எபி. 10:26,31) போன்ற வசனங்களில் கிறிஸ்துவை விட்டுப் பிரிந்து செல்பவரின் நிலை படம் பிடித்து காட்டப்படுகிறது. கிறிஸ்துவை விட்டுப் பிரிந்து செல்வது, இரட்சிப்பை விட்டுப் பிரிந்து செல்வதாகும். கிறிஸ்து இல்லாமல் நாம் பரலோகத்தில் பிரவேசிப்பது கூடாத காரியமாகும். அப்போஸ்தலனாகிய யோவான் எழுதும்போது தேவன் நமக்கு நித்திய ஜீவனைத் தந்திருக்கிறார், அந்த ஜீவன் அவருடைய குமாரனில் இருக்கிறதென்பதே அந்தச் சாட்சியாம் என்று எழுதுகிறார். (1 யோவான் 5:11). வாலிபக் கண்மணிகளே, இன்றும் இயேசு நம் ஒவ்வொருவரையும் பார்த்து நீங்களும் போய்விட மனதாயிருக்கிறீர்களே? என்று கேட்டுக் கொண்டு தான் இருக்கிறார். அந்தக் கேள்விக்கு நீங்கள் எப்படி பதிலளிக்கப் போகிறீர்கள்? நித்தியம் காத்துக் கொண்டிருக்கிறது. சிந்தித்து செயல்படுவோம்.

## ஸ்தேவானின் மரணம்

*(அப். 7ம் அதிகாரம்)*

1. **பயமுறுத்தும் கூட்டத்தின் நடுவே எத்தனை வைராக்கியமான முகம்**
2. **கர்த்தர் மீது அவருக்கு எத்தனை அன்பு, எவ்வளவு விசுவாசம்**
3. **எந்நிலையிலும் உண்மையை பேசக் கூடிய தைரியம்**
4. **கர்த்தருக்குள் மரிப்பதில் எத்தனை சந்தோஷம், எவ்வளவு சமாதானம்**
5. **உண்மையாகவே ஸ்தேவானின் வைராக்கியமான வாழ்விலும், மரணத்திலும் கிறிஸ்து மகிமைப்பட்டார்.**

# இடறுதற்கான கல்

**Bro. W.A. Holley**

**வே**தாகமத்தில் " **இடறுதற்கான கல்** " என்பது ஒரு மனிதன் கால் இடறி விழக்கூடிய ஒரு பொருளாக பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்தக்கல் அழிவுக்கும், வெறுப்புக்கும் காரணமாயிருக்கிறது *(ஏசா 57:14)* செப்பனியா தீர்க்கனின் காலத்தில் விக்கிரக வழிபாடு யூதர்களைத் தேவ கிருபையிலிருந்து விழுத்தள்ளும் இடறுதலின் கல்லாக அமைந்தது. *(செப். 1 அதி; எசே 7:19)* அவர்களின் விக்கிர கங்கள் ஜீவனற்றதாகவும், வல்லமை அற்றதாகவும் இருந்ததினால் அவர்களை இரட்சிக்க கூடாமற் போயிற்று.

விக்கிரக ஆராதனை என்றால் என்ன? தெய்வீக கனத்தை, சிருஷ்டிகளான சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், கற்கள், மரங்கள், மனிதர்கள், பணம் போன்றவைகளுக்கு கொடுப்பதே விக்கிரக வழி பாடாகும். சாத்தானுடனான போராட்டத்தில் இயேசு, "**... உன் தேவ னாகிய கர்த்தரைப் பணிந்து கொண்டு அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே என்றார்.**" *(மத் 4:10)* அப்போஸ்தலனாகிய யோவான், தேவதூதனை பணியப் போகும் போது, அவனை எச்சரித்த தூதன் " **நீ இப்படிச் செய்யாத படிக்குப்பார். உன்னோடும் உன் சகோதரரோடும் தீர்க்கதரிசி களோடும், இந்தப் புத்தகத்தின் வசனங்களைக் கைக்கொள்ளு கிறவர்களோடுங் கூட நானும் ஒரு ஊழியக்காரன், தேவனைத் தொழுதுகொள் என்றான்** " *(வெளி 22:9).*

உண்மையில் மேசியாவைக் குறித்தான, யூதர்களின் முன் நிர்ணய எண்ணத்திற்கு இயேசுவின் வார்த்தையும், செயலும் ஒத்ததா யிராததால் இயேசு அவர்களுடைய இடறுதற்கான கல்லானார். *(ரோமர் 9:32;1 பேதுரு 2:8)*

ஏசாயா தீர்க்கனின் காலத்தில் தேவன் இஸ்ரவேலருக்கு இடறுதற்கான கல்லாக இருந்தார். என்னவெனில், அவர்கள் தங்கள் விசுவாசத்தையும், நம்பிக்கையும் எல்லாவற்றையும் சிருஷ்டித்தவரும், நிறைக்கிறவருமான தேவன் மேல் வைக்காமல், அதற்கு மாறாக விக்கிரகத்தின்பால் வைத்தார்கள். *(ஏசா 8:13-15) (ஏசாயா 57:3-5; 14:15,20).*

இந்த நவீன உலகிலும், அநேக இடறுதற்கான கல்களை உருவகப் பார்வையால் காணமுடியும். அதில் சில தான் என்ன?

1. உண்மையும், நேர்மையும் கொண்ட அநேகருக்கு ஒரே சபை, இயேசு ஸ்தாபித்த சபை, வேதாகமத்தில் கூறப்பட்ட ஒரே சபை இடறு தற்கான கல்லாக மாறி இருக்கிறது. ஆனால், அது அப்படி இருக்கக் கூடாது. (மத் 16:18-19; அப். 20:28; எபே. 4:4-6; ரோமர் 16:16). உங்கள் வேதாகமம் சபையைக் குறித்து என்ன சொல்லுகிறதோ அதை ஏன் ஏற்கக்கூடாது? எந்த வகையிலும், வடிவிலும் பிரிவினை சபையானது உங்கள் வேதாகமத்தில் காணப்படுவதில்லை. இயேசு தன்னை பின்பற்றுபவர்கள் பிரிந்திருக்க விரும்புவதில்லை. மாறாக அவர்கள் ஒன்றாயிருக்க விரும்புகிறார். (யோவான் 17:20-23; 1 கொரி. 1:10; எபே 4:1-6; 1. கொரி. 11:18). ஒரு பிரபலமான பிரசங்கியார் ஜெபிக்கும் போது, **“இந்த மார்க்க பேதங்களுக்காக நான் தேவனை ஸ்தோத்திரிக்கி றேன், ஏன் என்றால் நம் ஒவ்வொருவரின் விருப்பத்திற்கேற்ற சபைகளை நாம் உடையவர்களாயிருக்க இது வழிவகுக்கிறது.”** என்றார். நண்பர்களே! இயேசு இப்படிப்பட்ட ஜெபத்தை, ஒருபோதும் ஏறெடுத்திருக்கமாட்டார். பிரிவினைச் சபைகளை நியாயப்படுத்துவது இயேசுவின் முகத்தில் ஓங்கி அறைவதாகும்.

சில ஞான வார்த்தைகள் ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கிறதைப் பாருங்கள். வேதாகமத்தைப் பொருத்தளவில் ஒரே உண்மையான சபை இருக்கிறது. ஆனாலும், வேதத்தில் சொல்லப்படாத மாற்று ஏற்பாட்டு சபைகள் அநேகம் உண்டு.

கிறிஸ்துவின் சபை தனித்தன்மை வாய்ந்தது. எதன் அடிப் படையில்? உன்னத தேவனை ஆராதிக்கிற விஷயத்தில் கிறிஸ்துவின் சபையானது போதிப்பதானாலும், செய்வதானாலும் வேதாகமத்தை, முழுமையாக அடிப்படையாக கொண்டிருக்கிறது. வேதாகமத்தைத் தவிர வேறொன்றையும் அடிப்படையாகக் கொண்டிராது. தேவன் கட்டளையிட்டவைகளிலிருந்து கூட்டவோ, குறைக்கவோ கூடாது என நாம் போதிக்கப்படுகிறோம். (வெளி 22:18-19; உபா 4:2; 12: 32; நீதி. 30:6)

அன்புக்குரிய நண்பர்களே ! வேதாகம சபை பற்றிய விஷயத்தில் இடறி விழாதிருங்கள். கிறிஸ்துவின் சபை அங்கத்தினர்களான நாங்கள், இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப்பின் வந்த முதல் பெந்தெ கொஸ்தே நாளில் ஸ்தாபிக்கப்பட்ட புதிய ஏற்பாட்டுச் சபையின் பழமையான, எளிமையான காரியங்களை எங்கள் நாட்களில் மீட்டமைக்க விரும்புகிறோம். (அப். 2:1-47; லூக். 8:11) வேத வசன மாகிய அந்த விதையை இப்பொழுது விதைத்தாலும், அப்பொழுது என்ன கனி கொடுத்ததோ அதையே இன்றும் கொடுக்கும் (லூக்கா 8:11:1, பேதுரு 1:22-23).

2. தண்ணீர் ஞானஸ்நானம் என்ற கர்த்தருடைய கட்டளையைக் குறித்து ஒருவரும் ஒருக்காலும் இடறி விழக்கூடாது. ஆனாலும், எண்ணிலடங்கா ஆயிரங்களில் பலர் இப்படி விழுகிறார்கள். கர்த்தருடைய கட்டளையான ஞானஸ்நானத்தின் முக்கியத்துவத்தைக் குறைக்க வேண்டும் என கங்கணம் கட்டிக் கொண்டு அநேக பிரசங்கியார்கள் தங்கள் நேரங்களை நகைக்கத்தக்க விவாதங்களை செய்யச் செலவிட முற்படுகிறார்கள். (யோவான் 3:3-5; எபே. 5:26; தீத்து. 3:5; அப். 22:16)

ஞானஸ்நானத்தைக் குறித்து நாம் ஏன் இடற வேண்டும்? கர்த்தருடைய கட்டளைக்கு ஏன் நாம் எதிர்த்து நிற்க வேண்டும்? (அப் . 10:48; மத் 28:18-20; மாற்கு. 16:15-16; 1.பேதுரு 3:20-21) இயேசு ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளவில்லையா? (மத்.3:13-17) இயேசு பாவ மன்னிப்பை பெற்றுக்கொள்ளும்படி ஞானஸ்நானம் பெறவில்லை. பாவமன்னிப்புக்கென்றும் ஞானஸ்நானம் பெற வில்லை. இயேசு ஏன் ஞானஸ்நானம் பெற்றார்? எல்லா நீதியையும் நிறைவேற்றும்படியாக அவர் ஞானஸ்நானம் பெற்றார் (மத்.3:15). கர்த்தருடைய கட்டளைகளை நிறைவேற்றும் போது ஒருவன் எல்லா நீதியையும் நிறைவேற்றுகிறான் (சங் 119:172) ஞானஸ்நானம் மூன்று படிகளால் ஆனது. தண்ணீரண்டைப் போதல், **தண்ணீருக்குள் போதல்...** தண்ணீரை விட்டு வெளிவருதல் (கொலோ 2:12; ரோமர் 6:24) தெளிப்பதும், ஊற்றுவதும் வேதாகமம் எதிர்பார்ப்பதைத் திருப்தி செய்யாது.

யோவான் ஸ்நானகன் அநேகருக்கு திருமுழுக்குக் கொடுத்தான். (மாற்கு. 1:1-13; லூக். 3:3) யோவான் ஞானஸ்நானத்தை ஏற்க மறுத்தவர்கள், **“அவனால் ஞானஸ்நானம் பெறாமல் தங்களுக்கு கேடுண்டாக தேவனுடைய ஆலோசனையைத் தள்ளி விட்டார்கள்”** (லூக். 14 : 29-30). ஏன் நாம் கர்த்தருடைய கட்டளையான ஞானஸ்நானத்தைக் குறித்து இடற வேண்டும்? சபையின் பிறந்த நாளில் இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப் பின் வந்த முதல் பெந்தெகொஸ்தே நாளில் ஏறக்குறைய 3000ம் ஆண்களும், பெண்களும் ஞானஸ்நானம் பெற்றார்கள். (அப். 2:1-4; அப். 2:36-38, 41-47)

யோவான் ஞானஸ்நானம் காலாவதி ஆனபின் அதைப் பெற்றவர்கள் கூட இரண்டாவது முறையாக ஞானஸ்நானம் பெற வேண்டிய அவசியம் ஏற்பட்டது. (அப். 18:24-28; 19:1-7). இன்றும் சிலர், இரட்சிக்கப்பட்டபின் ஞானஸ்நானம் பெற்றோம் என்கிறார்கள். வேத வசனங்களின்படி அது தவறாகும். ஆகவே, அவர்கள் பாவ மன்னிப்பைப் பெற்றுக்கொள்ள மீண்டும் ஞானஸ்நானம் பெற வேண்டியர்களாய் இருக்கிறார்கள். (அப். 2:38; மத். 26:28) நீங்கள்

உங்கள் ஞானஸ்நானத்தைக் குறித்து திருப்தி அடைந்திருக்கிறீர்களா என்பது கேள்வியே அல்ல. தேவன் உங்கள் ஞானஸ்நானத்தில் பிரியப் படுகிறாரா? என்பது தான் கேள்வி?

*3.* ஆராதனையில் இசைக்கருவிகள் வாசிப்பது குறித்து இடறுகிறீர்களா? புதிய ஏற்பாட்டை வாசித்துப் பாருங்கள். ஆர்கன், பியானோ, கச்சேரிகள், பாடகர் குழு, தனிப்பாடல்கள் இவைகளை நீங்கள் பார்க்கவே முடியாது. தயவு செய்து மத் *26:30;* மாற்கு *14:26;* அப்.*16:25;* யாக் *5:13* ஆகிய வசனங்களை வாசியுங்கள். இந்த வசனங்கள் பாடுவதை மாத்திரம் போதிக்கிறது. இசைக்கருவிகள் பயன்படுத்து வதைக் குறித்து அல்ல. தேவன் குறிப்பிட்ட மற்றும் பொதுவான கட்டளைகளை வேதாகமத்தில் கொடுத்திருக்கிறார். தேவன் நோவாவை கொப்பேர் மரத்தினால் பேழையை செய்யும்படி கட்டளை யிட்ட போது மற்ற எல்லா மரமும் விலக்கப்பட்டது (ஆதி 6:14). தேவன் எலிசாவைக் கொண்டு நாகமானிடம் யோர்தான் நதியில் ஏழுதரம் முழுகச் சொன்ன போது மற்ற எல்லா நதியும் விலக்கப்பட்டது (2 இராஜ *5:8-14).*

இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப் பின் வந்த முதல் பெந்தெ கொஸ்தே நாளில் இசைக்கருவிகள் அன்றைக்கே இருந்த போதிலும் கிறிஸ்துவின் சபை அதைப் பயன்படுத்தவில்லை. அமெரிக்கன் என்சைக்ளோபீடியாவின் பாகம் 12 ல், பக்கம் 688 ஐ பார்த்தால், போவிடாலியன் தான் மேற்கு ஐரோப்பா சபைகளில் சுமார் 670ம் ஆண்டில் ஆர்கனை அறிமுகப்படுத்தினார் என்பது தெரியவரும். கிரேக்க ஆர்த்தடாக்ஸ் சபை ஒரு போதும் அதை பயன்படுத்திய தில்லை. கர்த்தருடைய சபையானது கி.பி.33 ம் ஆண்டு ஸ்தாபிக்கப் பட்டது. *(அப்.2:1-4, 36-38, 42-47).*

கிறிஸ்துவின் சபையார் வித்தியாசமாய் இருக்க வேண்டும் என்று முயற்சிக்கவில்லை. **“...பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக ... நாங்கள் தைரிய மாய்ப் போராடுகிறோம்”** அவ்வளவுதான் (யூதா. 3) சில பிரபலமான அறிஞர்கள் வேதாகமம் இசைக்கருவிகளை விலக்கியிருப்பதைக் குறித்து தங்கள் எண்ணங்களை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். அவை களிலிருந்து சிலவற்றை உங்கள் முன் வைக்க விரும்புகிறேன்.

**ஜான் வெஸ்லி,** மெதடிஸ்டு இயக்கத்தின் ஸ்தாபகர் கூறுகை யில், எங்கள் ஆலயத்தில் ஆர்கன் இருப்பதைக் குறித்து ஆட்சேபணை ஏதும் இல்லை. ஆனால், அது பார்க்கப்படாமலும், கேட்கப்படாமலும் இருக்க வேண்டும் என்கிறார்.


**ஜான் கால்வின்,** ப்ரொடஸ்டண்ட் இயக்கத்தின் தலைவர் கூறுகையில், தேவனைத் துதித்துக் கொண்டாடுவதில் இசைக் கருவிகளைப் பயன்படுத்துவது தூபம் காட்டுவதும், விளக்குகள் ஏற்றுவதும், நியாயப் பிரமாணத்தில் நிழலாயிருக்கின்ற மற்ற காரியங்களை மீட்டமைப்பதும் எவ்வளவு அர்த்தமற்றதாயிருக்குமோ அவ்வளவு அர்த்தமற்றதாகவே இருக்கிறது என்கிறார்.

**ஆடம் கிளார்க்,** அவருடைய விளக்கவுரையில் பாகம் 6-ல் பக்கம் 686-ல் எழுதுகையில் நான் ஒரு வயதான மனிதன், ஒரு முதிர்ந்த ஊழியக்காரன், நான் தேவனுடைய ஆராதனையில் இசைக்கருவிகள் எவ்வித நன்மையும் செய்ததாக ஒரு போதும் அறியவில்லை. மாறாக, அது தீமைகளையே செய்திருக்கிறது என்று நம்புவதற்கு காரண முடையவனாயிருக்கின்றேன். இசையை ஓர் அறிவியலாக நான் மதிக் கிறேன், பாராட்டுகிறேன். ஆனால், கர்த்தருடைய வீட்டில் இசைக் கருவிகளை நான் வெறுக்கிறேன், ஒதுக்குகிறேன் என்று கூறுகிறார்.

உண்மையான ஆராதனைக்கு மனிதனின் சிறந்த முயற்சி தேவை. அது கர்த்தருடைய வழிகாட்டுதலுக்கு ஏற்றதாக இருத்தல் மிக அவசியம். *(யோவான் 4:24; அப்.2:1-4, 36,38,41-47)*. மனிதனல்ல, தேவனே ஆராதனையின் செயல்பாடுகளையும், எல்லைகளையும் தனக்கு உகந்ததாக ஏற்படுத்துகிறார், நிர்ணயித்திருக்கிறார். தங்கள் சொந்த முறையில் தேவனை ஆராதிக்கிறவர்கள் ஒருபோதும் அவரைப் பிரியப்படுத்த முடியாது.

## கிறிஸ்தவ மார்க்கம்

| | | |
|---|---|---|
| 1. | ஜீவ மார்க்கம் | (அப். 2:28) |
| 2. | விசுவாச மார்க்கம் | (கலா. 3:9) |
| 3. | உத்தம மார்க்கம் | (நீதி. 11:20) |
| 4. | ஞான மார்க்கம் | (நீதி. 4:11) |
| 5. | நீதியின் மார்க்கம் | (2 பேதுரு 2:21) |
| 6. | கர்த்தருடைய மார்க்கம் | (அப். 18:25) |
| 7. | தேவனுடைய மார்க்கம் | (அப். 18:26) |



# கதவு

Bro. வே.தானியேல் துரைராசன்

“ **ஆ**கிலும் பெந்தெகொஸ்தே பண்டிகை வரைக்கும் எபேசு பட்டணத்தில் இருப்பேன். ஏனெனில் இங்கே பெரிதும் அனுகூலமான கதவு எனக்குத் திறக்கப்பட்டிருக்கிறது ”. (1 கொரி. 16:8,9) இயேசு சொன்னார். “ நானே வாசல் (அ) கதவு ” (யோவான் 10: 1,2,7,9) பவுல் சொல்லுகிறார். மேலும், நான் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங் கிக்கும்படி துரோவா பட்டணத்தில் வந்தபோது கர்த்தராலே எனக்குக் கதவு திறக்கப்பட்டிருக்கையில் (2 கொரி. 2:12) என்கிறார். பரிசுத்த வேதாகமம் வித்தியாசப்பட்ட கதவுகளைப் பற்றி பேசுகிறது. கதவு என்ற வார்த்தை ஒப்புமையாக பேசப்படுகிறது.

வேதாகமத்தில் கதவு என்றால் வாய்ப்பு என்று அர்த்தமாகும். நாம் எளிதாக புரிந்து கொள்ள (கொலோ. 4:4) திருவசனம் செல்லும் படியான வாசலைத் தேவன் திறந்தருளும்படி எங்களுக்காகவும் வேண்டிக் கொள்ளுங்கள் என்று பவுல் எழுதுகிறார். புறஜாதியார் மத்தியில் சுவிசேஷத்தை பிரசங்கித்து திரும்பின பவுலும் பர்னபாவும்... சபையைக் கூடி வரச் செய்து தேவன் தங்களைக் கொண்டு செய்தவை களையும் அவர் புறஜாதிகளுக்கு விசுவாசத்தின் கதவைத் திறந்ததை யும் அறிவித்து... (அப். 14:27). துரோவாவில் கதவு திறந்திருந்தது (2 கொரி. 2:12) என்பதில் சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்ட வாய்ப்பு இருந்தது என்ற பொருளில் சொல்லப்பட்டிருக்கிறது. இதைப் போலவே இன்றைக்கும் அநேக கதவுகள் நமக்காக திறக்கப்பட்டிருக்கிறது.

## 1. ஆலோசனையின் கதவு உனக்காக திறக்கப்பட்டிருக்கிறது

தேவனுடைய திட்டம் ஆரம்ப கால முதலே உண்டு. மனிதனைக் குறித்த அந்த திட்டத்தில், அவன் ஆலோசனையின் கதவு வழியாக தம்மண்டை வரவேண்டும் என்பதே. இயேசுவின் அழைப்பு - என்னிடத்தில் வாருங்கள் என்பதாயிருக்கிறது (மத். 11: 28, 29). என்னை அனுப்பின பிதா ஒருவனை இழுத்துக் கொள்ளாவிட்டால் அவன் என்னிடத்தில் வரமாட்டான். பிதாவினிடத்தில் கேட்டுக்கற்று கொள்ளுகிறவன் எவனும் என்னிடத்தில் வருகிறான் (யோவான் 6:44, 45) தேவனுடைய இந்த ஆலோசனை திட்டமானது உலகமெங்கும் எடுத்து சொல்லப்பட்டது (மத். 28:19 மாற்கு 19:16) ஒருவராகிலும் இத்திட்டத்திற்கு விதிவிலக்கல்ல. இந்த மகத்தான கதவு நமக்காக திறக்கப்பட்டிருக்கிறது. நாம் அதை பயன் படுத்துவோமா?

## 2. இரட்சிப்பின் கதவு உனக்காக திறந்திருக்கிறது

தேவனுடைய குமாரன் இந்த பூமிக்கு வந்ததின் அதி முக்கிய மான நோக்கம் (I தீமோ. 1:15). குமாரன் - இதை செவ்வையாக செய்து முடித்தார். இழந்துபோனதை இரட்சிக்கவும் காணாமல் போனதை கண்டுபிடிக்கவுமே மனுஷகுமாரன் வந்தார். (லூக். 19:10) அவருடைய ஊழியம், அவருடைய அற்புதங்கள், அவருடைய உபதேசங்கள், அவருடைய முன்மாதிரியான ஜீவியம், அவருடைய அர்ப்பணிப்பான மரணம் இவையெல்லாவற்றிற்கும் ஒரே ஒரு நோக்கம்தான் உண்டு. பாவியை மீட்க அவராலேயன்றி ஒருவருக்கும் இரட்சிப்பு கிடையாது (அப். 4:12) ஒருவன் கிறிஸ்துவின் இரட்சிப்பைப் பெறவில்லை யெனில், அவன் ஒருக்காலும் இரட்சிப்பை பெறவே முடியாது. அவன் இரட்சிப்பை பெற வேறு வழி நிச்சயமாய் கிடையாது. (யோவான் 14:6) பாவி என்ன செய்ய வேண்டும்? புத்திமதியை கேட்டு இரட்சிப்பின் கதவின் வழியாய் உட்பிரவேசிக்க வேண்டும். எத்தியோப்பிய மந்திரிக்கு அந்த கதவு திறக்கப்பட்டிருந்தது (அப். 8:12, 8:35-38). நீ அதிக காலம் பாவத்திற்கு அடிமையாக இருக்க தேவனுக்கு விருப்பமில்லை. உன்னை அடிமைத்தனத்திலிருந்து மீட்கவே இரட்சிப்பின் கதவு சிலுவையின் மூலம் திறக்கப்பட்டது.

## 3. சேவையின் கதவு உனக்குத் திறக்கப்பட்டிருக்கிறது

அப் 2:47 இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் அனுதினமும் சபையில் சேர்த்து வந்தார். பிலிப்பிய சபைக்கு பவுல் எழுதுவதாவது, தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும், செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார். (பிலி. 2:13) உங்கள் சரீரங்களை ஜீவபலியாக ஒப்புக்கொடுங்கள் (ரோமர் 12:1). நம்மை சேவை செய்யவே தேவன் தெரிந்து கொண்டார். மனுஷ குமாரனும் ஊழியம் செய்யவே வந்தார் (மத். 20:28). நாமும் ஊழியம் (சேவை) செய்ய வேண்டும். மனத்தாழ்மையை அணிந்து கீழ்ப்படிய வேண்டும் (1 பேதுரு 5:5) ஆரம்ப கால சபை சேவை மனப்பான்மை நிறைந்திருந்தது (அப். 4:32-37) மாம்ச தேவைகளுக்காக சேவை செய்தனர். ஆவிக்குரிய தேவைகளுக்காக சேவை செய்தனர் (கலா. 6:1-2) காணாமல் போனதை தேட தீவிரமாக இருந்தார்கள். ஆகவே, சிலுவையைப் பற்றி பிரசங்கிப்பதில் தினந்தோறும் அக்கறையுள்ளவர் களாயிருந்தார்கள். (அப். 5:42; 8:4) எபேசுவில் பவுலுக்கு ஒரு மாபெரும் கதவு திறக்கப்பட்டிருந்தது. நமக்கும் ஒரு சேவையின் கதவு திறக்கப் பட்டிருக்கிறது. நாம் நல்ல உக்கிராணக்காரனாக இருந்து அந்த வாய்ப்பை பயன்படுத்துகிறோம்.

பிலடெல்பியா சபைக்கு இயேசு சொல்லுகிறார். இதோ திறந்த வாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன். அதை ஒருவனும் பூட்டமாட்டான் (வெளி. 3:8). சேவையின் கதவு உனக்காக திறக்கப் பட்டிருக்கிறது. இன்றே சேவை செய்ய புறப்படுவீர் (மத். 21:28,29,30,31)

## 4. பரலோகத்தின் கதவு உனக்காகத் திறக்கப்பட்டிருக்கிறது

இயேசு சொன்னார் ***நானே ஆடுகளுக்கு வாசல்... என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால் அவன் இரட்சிக்கப் படுவான்*** (யோவான் 10:7,9) சீஷர்களை விட்டு பரத்துக்கு எடுத்துக் கொள்ளப்படுவதற்கு முன், ***என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ் தலங்கள் உண்டு; அப்படி இல்லாதிருந்தால் நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப் போகிறேன்*** (யோவான் 14:2,3) வாசியுங்கள். இயேசு நமக்காக ஆயத்தம் பண்ணின கதவுகள் வழியாய் பிரவேசிக்க முடிவு செய்தவர்களுக்கு பரலோகத்தின் கதவை திறந்திருக்கிறார். பரலோகம் என்பது தேவன் தமது கைகளினால் (2 கொரி. 5:1) கட்டப்பட்ட ஒரு வீடு. அது அழியாததும், நிலை நிற்கிறதுமான மகிமையும் உடையது. (I பேதுரு 1:3,4,5) அங்கு மரணமில்லை. கண்ணீரில்லை, துக்கமில்லை (வெளி. 21:4) வாசியுங்கள். (வெளி. 22:1-5) மேற்கண்ட ஆலோசனை யின் கதவு, இரட்சிப்பின் கதவு, சேவையின் கதவு, பரலோகத்தின் கதவு ஆகிய கதவுகளை தேவன் திறந்து வைத்திருக்கிறார்.

முடிவாக வெளி. 3:20 ன்படி உன்னுடைய வாழ்க்கையில் இயேசு பலவந்தமாக நுழைய விரும்ப மாட்டார். நீ தான் அவரை அன்போடு அழைக்க வேண்டும். நீ அனுமதிக்க வேண்டும். இப்பொழுது ஒரு மகத்தான கதவு உனக்காக திறக்கப்பட்டிருக்கிறது.

## இயேசு கிறிஸ்து எப்படியெல்லாம் புறக்கணிக்கப்பட்டார்

1. அவருடைய தெய்வீகத் தன்மை புறக்கணிக்கப்பட்டது [லூக். 1:35; 3:22]
2. அவருடைய அதிகாரம் புறக்கணிக்கப்பட்டது [மத். 28:28; யோவான் 5:26,27]
3. அவருடைய நாமம் புறக்கணிக்கப்பட்டது [பிலி. 2:8,9; அப். 11:26]
4. அவருடைய சபை புறக்கணிக்கப்பட்டது [மத். 16:18; அப். 20:28]
5. அவருடைய சுவிசேஷம் புறக்கணிக்கப்பட்டது [மாற்கு 16:15; ரோமர் 1:16]

# தீர்க்கதரிசிகள்

**Bro. Dehoff**

பரிசுத்த வேதாகமத்தில் ஆதியாகமம் முதல் எஸ்தர் வரையுள்ள நூல்கள், பழைய ஏற்பாட்டின் சரித்திரப் புத்தகங்களாகும். எபிரேய தேசத்தின் உயர்வையும், தாழ்வையும் குறித்த காரியங்களை அவை சொல்லுகிறது.

யோபுவிலிருந்து, உன்னதப்பாட்டு வரையிலான ஐந்தும் பாட புத்தகங்களாகும். அவை, எபிரேய தேசத்தின் பொற்காலத்துக்குச் சொந்தமானவை. இவை போக பதினாறு தீர்க்கதரிசிகளால் எழுதப் பட்ட பதினேழு தீர்க்கதரிசனப் புத்தகங்கள் உண்டு. (எரேமியா புலம்பல் இரண்டுக்கும் எரேமியா தீர்க்கன் தான் ஆசிரியர்). இவைகள் பொதுவாக தீர்க்கதரிசனப் புத்தகங்கள் என்றும் சிறிய தீர்க்க தரிசனப் புத்தகங்கள் என்றும் அழைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| **பெரிய தீர்க்க தரிசனங்கள்** : | ஏசாயா, எரேமியா, புலம்பல், எசேக்கியல், தானியேல் |
| **சிறிய தீர்க்க தரிசனங்கள்** : | மீகா, நாகூம், ஓசியா, யோவேல், ஆமோஸ் ஒபதியா, யோனா, ஆபகூக், செப்பனியா, ஆகாய், சகரியா, மல்கியா |

புத்தகங்கள் அதன் அளவைப் பொறுத்துத்தான் பெரிய, சிறிய என்று பிரிக்கப்பட்டுள்ளது. ஏசாயா, எரேமியா, எசேக்கியல் போன்ற இந்தப் புத்தகங்கள் ஒவ்வொன்றும் மற்ற சிறிய தீர்க்கதரிசனங்கள் 12க் காட்டிலும் பெரிதான அளவில் உள்ளது. சிறிய தீர்க்கதரிசன புத்தகங்களில் பெரியவைகளாகிய ஓசியா, சகரியா ஆகிய இந்த இரண்டின் அளவுக்கு தானியேல் புத்தகம் உள்ளது.

மொத்தமுள்ள பதினாறு தீர்க்கத்தரிசிகளில் 13 பேர் எபிரேய தேசத்தின் அழிவுடனும், 3 பேர் அதன் மீட்புடனும் சம்பந்தப்பட்டிருக் கிறார்கள். தேசத்தின் அழிவு இரண்டு காலகட்டங்களில் நிறைவேற்றப் பட்டது. வடக்கு இராஜ்ஜியம் கி.மு. 737-721ல் வீழ்ந்தது. இக்காலத்திற்கு முன்பாகவும் இக்காலகட்டத்திலும் யோவேல், ஆமோஸ், ஓசியா, ஏசாயா, மீகா போன்றவர்கள் தீர்க்கதரிசிகளாக இருந்தனர்.

தெற்கு இராஜ்ஜியம் கி.மு. 606-586ல் வீழ்ந்தது. இக்கால கட்டத்தில் எரேமியா, எசேக்கியல், தானியேல், ஒபதியா, நாகூம், ஆபகூக், செப்பனியா போன்றவர்கள் தீர்க்கதரிசிகளாக இருந்தனர்.

தேசத்தின் மீட்பு கி.மு. 536-444 முதல் உள்ள காலகட்டத்தில் நடந்தது. அப்பொழுது ஆகாய், சகரியா, மல்கியா போன்றவர்கள் தீர்க்க தரிசிகளாக இருந்தனர்.

***சரித்திர பின்னணி :***

சாலமோன் ராஜாவின் ஆளுகையினுடைய கடைசி நாட்களில், பத்துக் கோத்திரத்தார் வழிவிலகிப் போனதினிமித்தம், அவர்களை எச்சரிக்கும்படியாக, தீர்க்கதரிசிகளை அனுப்பும் தேவை தேவனுக்கு ஏற்பட்டது. அப்பொழுது அரசியல் ரீதியாக தேசம் பிளவுபட்டது. எகிப்தியரின் மத நம்பிக்கையின்படியான கன்றுக்குட்டி வணக்கத்தை வடக்கு ராஜ்ஜியம் ஏற்றுக்கொண்டது. அதன்பிறகு, சீக்கிரத்தில் பாகால் வணக்கத்தையும் கூட்டிக் கொண்டது. இந்தப் பாகால் வணக்கம் தெற்கு இராஜ்ஜியத்திலும் காணப்பட்டது. ஜனங்களுடைய மனதி லிருந்து தேவனுடைய நாமம் மறைந்து போயிற்று. ஆகவே தேவனு டைய வார்த்தைகளைப் போதித்து, ஜனங்களை எச்சரிக்கும் படியாக தீர்க்கதரிசிகள்அனுப்பப்பட்டார்கள்.

தேசத்தினுடைய பக்திக்குண்டான காரியங்களைப் போதிப்ப வர்களாக முறையாக ஏற்படுத்தப்பட்ட ஆசாரியர்கள் இருந்தார்கள். இந்த ஆசாரியத்துவம் பரம்பரையாக வந்தது. ஆசாரியர்களில் அநேகர் சன்மார்க்கராக இருந்தார்கள். ஜனங்களின் பாவங்களினிமித்தம் தேவனிடத்தில் மன்றாடுவதற்குப் பதிலாக அவர்களுடன் சேர்ந்து இவர்களும் பாவத்தில் விழுந்து, அக்கிரமத்தின் தலைவர்களாகி விட்டனர்.

தீர்க்கதரிசன வேலை பரம்பரையானது அல்ல. ஒவ்வொரு தீர்க்க தரிசியும், தேவனிடத்திலிருந்து அழைப்பைப் பெற்றுக் கொண்டான். அவர்கள் ஒருவருக்கொருவர் வித்தியாசமானவர்கள். ஏரேமியாவும், எசேக்கியேலும் ஆசாரியர்கள், சகரியாவும் ஒரு ஆசாரியனே. ஏசாயா, தானியேல், செப்பனியா போன்றவர்கள் ராஜகுலத்தைச் சேர்ந்த வர்கள். ஆமோஸ் ஒரு விவசாயி, மற்றவர்கள் பற்றி நமக்கு ஒன்றும் சொல்லப்படவில்லை. ஆனால் அவர்கள் ஒவ்வொருவரும் சர்வ வல்லமையுள்ள தேவனால், தம்முடைய வார்த்தைகளைச் சொல்லி ஜனங்களை எச்சரிக்கும்படி அழைக்கப்பட்டவர்கள்.

தீர்க்கதரிசன வேலையின் நோக்கம், விக்கிர வணக்கத்திலிருந்து தேசத்தைக் காப்பாற்றுவது, விக்கிரக வணக்கத்திலிருந்து மனந்திரும் பாதவர்கள் அழிக்கப்படுவார்கள் என்று சொல்லி ஜனங்களை எச்சரிப்பது அத்தோடு, மீந்திருப்பவர்கள் இரட்சிக் கப்படுவார்கள் என்றும், அவர்களிலிருந்து, தாவீதின் சந்ததியைச் சேர்ந்த ஒருவர், தாவீதின் சிங்காசனத்தில் உட்கார்ந்து, என்றென்றும் அழியாத ஒரு இராஜ்ஜியத்தை ஏற்படுத்துவார் என்றும், அவர் தான் இயேசு கிறிஸ்து

என்றும் வாக்குத்தத்தம் செய்ய வேண்டியவர்களாயிருந்தார்கள். கிறிஸ்துவின் வருகையும், அவருடைய சபையாகிய இராஜ்ஜியம் ஸ்தாபிக்கப் படுதலும், எல்லா தீர்க்கதரிசிகளாலும் ஜனங்களுக்கு கொடுக்கப்பட்ட ஒரு பெரிய வாக்குத்தத்தமாகும்.

***தீர்க்கதரிசிகளின் காலம் :***

*தீர்க்கதரிசிகளின் காலம் கி.மு. 800 - 400 வரையிலான 400 ஆண்டுகால அளவைக் கொண்டது. இக்கால கட்டத்தின் மிக முக்கிய சம்பவம் எருசலேம் அழிக்கப்படுதல். இச்சம்பவத்தோடு, எரேமியா, எசேக்கியேல், தானியேல், ஒபதியா, நாகூம், செப்பனியா ஆகிய ஏழு தீர்க்கதரிசிகள் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். தீர்க்கதரிசன செயல் பாட்டின் முக்கியமான ஒரு கட்டம் தான் எருசலேமின் வீழ்ச்சியாகும்.*

*எருசலேமின் வீழ்ச்சியை தேவன் தான் ஏற்படுத்தினார் என்றாலும் அதைத் தவிர்ப்பதற்கு அவர் எல்லா முயற்சியையும் செய்தார். தேவனுடைய பெயரைச் சொல்லும்படியாக எருசலேம் இருந்தது. ஆகையால், அந்தப்பட்டணத்தைக் காப்பாற்ற விரும்பி, ஒவ்வொரு தீர்க்கதரிசியும் அனுப்பினார். விக்கிர வணக்கத்தால், தேவனுடைய நாமம் முற்றிலும் அழிக்கப்பட்டுப் போயிற்று என்ற நிலை வந்தபோதுதான், பட்டணமானது அழிக்கப்பட்டு, ஜனங்கள் அடிமைத்தனத்திற்குள் கொண்டு செல்லப்பட்டார்கள். தீர்க்கதரிசிகளால், பட்டணத்தைக் காப்பாற்ற முடியவில்லை. ஆனால், அவர்கள் தேவனுடைய ஜனங்களின் மீட்பு நடக்குமென்றும், மகிமையுள்ள ஒரு எதிர்காலம் அவர்களுக்கு இருக்கிறதென்றும் வாக்களித்தார்கள்.*

## நாளும், நடப்பும்

1. முல்லைப்பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்திக் கொள்ளலாம் – உச்சநீதிமன்றம் தீர்ப்பு
2. தமிழகத்தில் ஜல்லிக்கட்டுக்குத் தடை
3. சென்னை சென்ட்ரலில் குண்டு வெடித்து ஒரு பெண் சாவு, 14 பேர் காலம்
4. பிளஸ் 2 தேர்வு முடிவுகள் வெளியானது. 90 சதவீதம் மாணவ, மாணவியர் தேர்ச்சி பெற்றுள்ளனர்.
5. தமிழகத்தில் கோடை வெப்பத்தை ஓரளவு தணித்தது, வங்கக்கடலில் குறைந்த காற்றமுத்த தாழ்வு நிலையால் பெய்த மழை
6. ஐபிஎல் கிரிக்கெட் ஆட்டங்கள் விறுவிறுப்பாக நடந்து கொண்டிருக்கின்றன.

# நீங்கள் உங்களுடையவர்கள் அல்லவே

- சகோ. ஹென்றிமோகன்

இந்தக் கேள்வி அநேகருக்கு வியப்பாக இருக்கலாம். இந்த உண்மையை அறியாதவர்கள், மது அருந்துவதாலும், புகைப்பிடிப்பதாலும், போதை வஸ்துக்களை உபயோகிப்பதாலும், விபச்சாரம், வேசித்தனம் போன்ற பல தீய செயல்களை செய்வதாலும் தங்களைக் கெடுத்துக் கொண்டுள்ளனர்.

இப்படிப்பட்டவர்களைச் சந்தித்து ஏன் இவ்வாறு செய்து வருகிறீர்கள் என்று விசாரித்தால், அவர்களிடமிருந்து கிடைக்கும் பதில், என் பணம், என் சரீரம், என் விருப்பம் இதை கேட்பதற்கு நீ யார்? என்று கேட்போரின் வாயை அடைத்துவிடுவார்கள். வேதனை என்னவெனில் சரீரத்தை கெடுத்துக்கொள்ளும் உரிமையுள்ளவருக்கு, கெட்டுப்போன சரீரத்தின் அவயவங்களை குணப்படுத்தவும் கூடுமானால் அவர் கூறும் வார்த்தையை ஏற்றுக்கொள்ளலாம். அந்த தகுதி மனுஷனுக்கு இல்லை என்பதை வெளிப்படையாக அறிந்திருக்கும் போது, அதை குணப்படுத்தும் வல்லமையுடையவருக்கே இந்தச் சரீரம் சொந்தமானது என்பதை ஏற்றுக்கொள்வதே நியாயம்.

மனுஷன் மாம்சத்தின் வழியாய் பிறந்தாலும், முடிவிலே மண்ணுக்குத்தான் திரும்புகிறான். நம்முடைய உருவம் இன்னதென்று தேவன் அறிவார் என்றும்; நாம் மண்ணென்று நினைவு கூறுகிறார் என்றும் சங். 103:14ல் தாவீது எழுதுகிறார். ஆம் சிருஷ்டிப்பின் வரலாற்றில் எல்லா சிருஷ்டிப்புகளையும் வார்த்தையினாலேயே உண்டாக்கின தேவனாகிய கர்த்தர் மனுஷனை பூமியின் மண்ணினாலே உண்டாக்கி, ஜீவ சுவாசத்தை அவன் நாசியிலே ஊதி அவனை ஜீவாத்துமாவாக்கினார் என்று ஆதி. 2:7 ல் பார்க்கலாம். தேவன் ஏற்படுத்தின இயற்கை நியதியின்படி மாம்சத்தின் வழியாய் பிறந்தாலும் முடிவிலே மண்ணுக்கு திரும்புவது தேவனுடைய நியமம். ஆதி. 3:19-ல் **நீ பூமியிலிருந்து எடுக்கப்பட்டபடியால் நீ பூமிக்குத் திரும்பு மட்டும் உன் முகத்தின் வேர்வையால் ஆகாரம் புசிப்பாய்; நீ மண்ணாயிருக்கிறாய் மண்ணுக்குத் திரும்புவாய் என்றார்.** எனவே, சிருஷ்டிப்பின்படி நீங்கள் தேவனுக்கு சொந்தமானவர்கள் என்றும் நீங்கள் உங்களுடையவர்கள் அல்ல என்றும் அறிந்து கொள்ளுங்கள்.

மேலும், உங்கள் சரீரமானது **நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாய் இருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்ல வென்றும் அறியீர்களா?** என்று 1 கொரி. 6:19-ல் அப்போஸ்தலனாகிய பவுல் எழுதுகிறார். மேலும், பவுல் எழுதுகிறதாவது; **பிதாவாகிய**

**ஒரே தேவன் நமக்குண்டு, அவராலே சகலமும் உண்டாயிருக்கிறது. அவருக்கென்று நாமும் உண்டாயிருக்கிறோம்...** என்று (1 கொரி. 8:6) மனுஷன் தேவனுடைய மகிமைக்கென்றே உண்டாக்கப்பட்டவனாய் இருந்தாலும் தேவன் அவனை ஒரு அடிமையைப் போல நடத்தாமல் அவனுக்கு முழுமையான சுதந்திரத்தையும், நன்மை தீமை இன்னதென்று பகுத்து அறியும் ஆற்றலையும், எல்லாவற்றையும் அனுபவிக்கும் அதிகாரத்தையும் தந்திருக்கிறார். ஆனால், தேவன் மனுஷனை தீமைக்குரியவனாய் உண்டாக்கவில்லை. அவனை செம்மையானவனாக உண்டாக்கினார் என்றும், அவர்களே அநேக உபாயத் தந்திரங்களைத் தேடிக் கொண்டார்கள் என்றும் பிரசங்கி 7:29ல் ஞானி சாலமோன் கூறுகிறார்.

ஆம், செம்மையாக உண்டாக்கப்பட்ட மனிதன் தேவனால் அவனுக்கு அளிக்கப்பட்டுள்ள சுதந்திரத்தை தீமையான வழிகளில் பயன்படுத்திக் கொண்டு வருகிறான். இதைக் குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்தியருக்கு எழுதின நிருபத்தில் **எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் நான் ஒன்றுக்கும் அடிமைப்படமாட்டேன்** என்று 1 கொரி. 6:12-ல் உறுதியாக கூறுகிறார். எனவே, மனுஷன் செய்ய நினைக்கும் எல்லா செயலும் அவனுக்கு தகுதியாயிராது என்பதை பவுல் தெளிவாகக் கூறுகிறார். உதாரணமாக சிலவற்றை காண்போம்.

¦øP¤izuÀ :

புகைப்பிடித்தல் பழக்கத்திற்கு அநேகர் அடிமைகளாயுள்ளனர். இன்னும் இதனுடைய நிலையைப் பார்த்தால் உண்பதற்கு உணவு இல்லை என்றாலும் பரவாயில்லை. புகைபிடிக்காமல் இருக்க முடியாது என்று கூறும் அளவிற்கு இத்தீய பழக்கம் மனித சமுதாயத்தில் இடம்பிடித்துள்ளது. புகைபிடிக்கவில்லை என்றால் தங்களுடைய வேலைகளை செய்ய இயலாமல் போவதாக ஒரு மாயையான எண்ணமுடையவர்களாய் அநேகர் காணப்படுகின்றனர். வாலிபர்கள் அநேகர் புகைப்பிடிப்பதை தங்கள் வாழ்க்கையில் ஒரு ஸ்டைலாக நினைக்கின்றனர். இத்தீய பழக்கம் ஒருபாவம் என்று கூறினால் அவ்வாறு வேதாகமத்தில் எங்கே சொல்லப்பட்டுள்ளது என்றும் சிலர் கேட்பார்கள். ஆனால், எல்லாருக்கும் அதிகாரமுண்டு. ஆனால் எல்லாம் தகுதியாயிராது. புகை மனுஷனுடைய சரீரத்திற்குள் செல்வது தகுதியானதல்ல. அது அடுப்பிலும் அல்லது எரிபொருள் பயன்படுத்தப்படும் இடங்களிலும் இருப்பதே தகுந்தது. எரிபொருள் பயன்படும் இடங்களில் ஒரு புதிய புகைபோக்கியே அமைத்தால் அது எவ்வளவு சீக்கிரமாய் பழுதடைந்து பயனற்று போகிறது என்பது எல்லாரும் நன்றாக அறிந்ததே. அப்படியிருக்கும் போது சுத்தமான காற்று பிரவேசிக்க வேண்டிய மனுஷடைய சரீரத்திற்குள் புகை பிரவேசிக்கும் போது மனுஷனுடைய சரீரம் கெட்டுப்போவது

நிச்சயமல்லவா. எனவே உங்கள் சரீரம் நீங்கள் தேவனால் பெற்றதும் அவர் வாசம் பண்ண வேண்டிய ஆலயமாயிருக்கிறதென்பதால் தேவனுடைய வாசஸ்தலத்தைக் கெடுப்பது பாவமில்லையா? எனவே மனுஷனுக்கு தகுதியாயிராத புகைப்பிடிக்கும் பழக்கத்தை விட்டு விடுவது நல்லது. காரணம் இந்த சரீரம் உங்களுடையதல்ல.

## ÷£õøu ÁixUPÒ :


புகைப்பிடிப்பது போன்று போதை வஸ்துக்களுக்கும் மனுஷர் அடிமைகளாயுள்ளனர். இத்தீய பழக்கத்தால் மனுஷன் தன்மானத்தை இழந்து சிறுபிள்ளைகளாலும் புறக்கணிக்கப்படுகிறான். **குடிகாரன் பேச்சு விடிஞ்சா போச்சு** என்று கேலியாக பேசும் நிலைக்கு தள்ளப் படுகிறான். போதையில் மயங்கி விழுந்த ஆதரவற்ற நிலையில் அநாதையாய் கிடப்பவர்கள் எத்தனைபேர். இதைக் குறித்து சாலமோன் ஞானி எழுதுகிறார். **ஐயோ ! யாருக்கு வேதனை? யாருக்கு துக்கம்? யாருக்குச் சண்டைகள்? யாருக்கு புலம்பல்? யாருக்கு காரணமில்லாத காயங்கள்? யாருக்கு இரத்தங் கலங்கின கண்கள்? மதுபானம் இருக்கும் இடத்திலே தங்கித் தரிப்பவர்களுக்கும், கலப்புள்ள சாராயத்தை நாடுகிறவர் களுக்குத்தானே. மதுபானம் இரத்த வருணமாயிருந்து, பாத்திரத்தில் பளபளப்பாய் தோன்றும் போது நீ அதைப் பாராதே. அது மெதுவாய் இறங்கும். முடிவிலே அது பாம்பைப் போல் கடிக்கும், விரியனைப் போல் தீண்டும். உன் கண்கள் பரஸ்திரீகளை நோக்கும் உன் உள்ளம் தாறுமாறானவைகளைப் பேசும். என்னை அடித்தார்கள், எனக்கு நோகவில்லை, என்னை அறைந்தார்கள், எனக்கு சுரணையில்லை, நான் அதைப்பின்னும் தொடர்ந்து தேட எப்பொழுது விழிப்பேன் என்பாய்** (நீதி. 23: 29-35) இவைகள னைத்தும் மனுஷனுடைய சரீரம் முழுவதையும் சீராக செயல்பட வைக்கும் மூளையையும் சரீரத்தின் அவயவங்களையும் போதை வஸ்துக்கள் கெடுத்துப் போடுவதே காரணமாய் இருக்கிறது. தேவனு டைய மகிமைக்குரிய சரீரத்தைக் கெடுத்துப் போடுவது பாவம். எனவே, இத்தீய பழக்கத்தை விட்டு விடுவது நலம். காரணம் இந்த சரீரம் உங்களுடையதல்ல.

## ÷Á]zuÚ®

குடிப்பழக்கத்திற்கு அடிமையானவர்கள் பல தீய பழக்கத்திற்கு அடிமையாவது எளிது. நீதி 23:33ல் **உன் கண்கள் பரஸ்திரீகளை நோக்கும், உன் உள்ளம் தாறுமாறானவைகளைப் பேசும்** என்று சொல்லப்பட்டுள்ளது. இவ்விதமான தீய பழக்க வழக்கங்களுக்கு அடிமைப்படாமலிருக்க அநேக எச்சரிப்புகள் கொடுக்கப்படுகிறது. இது சம்பந்தமாக வேதத்தில் கொடுக்கப்பட்டுள்ள எச்சரிப்பை பார்ப்போமாக. நீதி. 5ம் அதிகாரத்தில் **பரஸ்திரீயின் உதடுகள் தேன்**

**கூடுபோல் ஒழுகும். அவள் வாய் எண்ணெயிலும் மிருதுவாயிருக்கும். அவள் செய்கையின் முடிவோ எட்டியைப் போலக் கசப்பும், இருபுறமும் சுருக்குள்ள பட்டயம் போல் கூர்மையுமாயிருக்கும். அவள் காலடிகள் மரணத்திற்கு இறங்கும்; அவள் நடைகள் பாதாளத்தைப் பற்றிப்போகும்.** எனவே சேராதே. சேர்ந்தால் உன் மேன்மையை அந்நியர்களுக்கும், உன் ஆயுசின் காலத்தைக் கொடூரருக்கும் கொடுத்து விடுவாய். ஆம் ! இவ்விமான தகாத செயல்களினால் இன்று அநேகர் எய்ட்ஸ் என்னும் கொடிய வியாதியினால் பாதிக்கப்பட்டவர்களாய் தங்களின் உருவழிந்து போகும் நிலையில் ஐயோ! புத்தி கெட்டுப் போய் இவ்வாறு நடந்து கொண்டேனே போதகத்தை நான் வெறுத்தேனே, கடிந்து கொள்ளுதலை என் மனம் அலட்சியம் பண்ணினதே எனக்கு புத்தி சொன்னவர்களின் சொல்லை நான் கேளாமல் போனேனே என்று துக்கித்து மரண வேதனையில் இருப்போர் எத்தனைபேர். இந்நிலை தவிர்க்கப்பட வேண்டுமானால் வேத வசனத்திற்கு செவி கொடுங்கள். 1 கொரி. 6:18ல் **வேசித்தனத்திற்கு விலகி யோடுங்கள். மனுஷன் செய்கிற எந்த பாவமும் சரீரத்திற்குப் புறம்பாயிருக்கும். வேசித்தனஞ்செய்கிறவனோ தன் சுய சரீரத்திற்கு விரோதமாய் பாவஞ்செய்கிறான்** என்று பவுல் கூறுகிறார். **பிறருடைய மனைவியினிடத்தில் பிரவேசிப்பவனும் அப்படியே அவளைத் தொடுகிற எவனும், ஆக்கினைக்குத் தப்பான்** என்று நீதி. 6:29-ல் சாலமோன் எழுதுகிறார்.

நமக்கு விரோதமாக அல்லது நம்முடைய உடைமைகளுக்கு விரோதமாக யாரேனும் தீங்கு செய்வதை நாம் சற்றேனும் பொறுத்துக் கொள்வதில்லை. ஆனால், மேற்சொன்ன தீய செய்கைகளினால் நாம் நம்மைக் கெடுத்துக் கொள்வதில் சற்றேனும் தயக்கமல்லாமலிருப்பது ஏனோ ! நான் என்ற எண்ணமோ? இல்லை ! நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் நீங்கள் தேவனுக்கு சொந்தமானவர்கள் என்றும் வேதத்தில் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, இந்த சரீரத்தை கெடுத்துப் போட எவருக்கும் அதிகாரமில்லை. எனவே, நாம் நமக்கே பிரியமாய் நடவாமல் தேவனுடைய நன்மையும், பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறிந்து உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமான ஜீவபலியாக ஒப்புக் கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு அப்போஸ்தலனாகிய பவுல் ரோமர் 12:1 ல் உங்களையும் வேண்டிக் கொண்டுள்ளார். எனவே, நீங்கள் உங்களை தேவனுக்கு ஒப்புக் கொடுங்கள் என்று அடியேனும் பணிவாய் வேண்டிக் கொள்கிறேன். சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக. உங்கள் ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதும் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக. ஆமென் !


Children
முகாமில் சிறுவர், சிறுமியர்


காலை தியான வகுப்பின் போது... ஒரு பகுதி
Morning Devotion


பகல் நேர வகுப்பின் போது... ஒரு கோணத்தில்
Day class under tree




Regd. News Paper RNI No. TNTAM/2006/20446
Postal regn. No. Erode/26/2012-2014
Posted at Erode HPO on 20/21 of Every Month.
**Licensed to Post without pre payment**
**No: TN / WR / ERD / 03 / WPP / 2012-2014**

**TV நேயர்கள் மற்றும் ஆசான் வாசகர்களுக்கான**
**சிறப்பு வகுப்பின் போது**

Preachers & Men




During Lunch time




**Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.**
**Editor. S. Rajanayagam.**